# எங்கும் தமிழ் எதிலும் தமிழ்

இரத்தினவேல் சதாசிவம்

பாரதிதாசன் பல்கலைக் கழகம்

திருச்சிராப்பள்ளி

Bharathidasan University

இராம இலட்சுமண நாராயண நடேச அறக்கட்டளைச்
சொற்பொழிவுகள்

10 - 11, ஆகஸ்டு, 1989

# எங்கும் தமிழ் எதிலும் தமிழ்


இரத்தினவேல் சதாசிவம்

*முன்னை உயர்நீதிமன்ற நடுவர்*



பாரதிதாசன் பல்கலைக் கழகம்

1989

© பார்த்தீபன் பல்கலைக் கழகம்

வெளியீடு :

விலை ரூ. :

நூலின் பெயர்: : எங்கும் தமிழ் எதிலும் தமிழ்
(அறக்கட்டளைச் சொற்பொழிவு)

ஆசிரியர் : இரத்தினவேல் சதாசிவம்
(முன்னை உயர்நீதிமன்ற நடுவர்)

நூலின் அளவு : 1/8 ராயல்

பக்கங்கள் : xiv + 60

அச்சிட்டோர் : கீதா பிரஸ், திருச்சி - 620 018.

RAMA LAKSHMANA NARAYANA NATESA
ENDOWMENT LECTURES

10th and 11th AUGUST, 1989

# EṄKUM TAMIḺ ETILUM TAMIḺ

The Honourable Justice

**RATHNAVEL SADASIVAM**

(Retd. High Court Judge)

BHARATHIDASAN UNIVERSITY

1989

# அணிந்துரை

ஆர்க்காடு இரட்டையர்களான முனைவர் இராமசாமி முதலியார், மருத்துவ மேதை இலட்சுமணசாமி முதலியார் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னைத் துணைவேந்தர் உயர்திரு. நாராயணசாமி பிள்ளை, திருச்சி தூய வளனார் கல்லூரி முன்னைத் தமிழ்ப் பேராசிரியரும் முனைவர் ந. சஞ்சீவி அவர்களின் தந்தையாருமாகிய திரு. நடேச முதலியார் ஆகியோர் பெயரில், இப் பல்கலைக் கழகத்தில், முனைவர் ந. சஞ்சீவி அவர்கள் அறக்கட்டளை ஒன்று நிறுவியுள்ளார்கள். அவ்வறக் கட்டளையின் சார்பில் முன்னை உயர்நீதிமன்ற நடுவர் மாண்புநிறை இரத்தினவேல் சதாசிவம் அவர்கள் நிகழ்த்தும் சொற்பொழிவுகள் இந்நூலாக உருப்பெற்றுள்ளன.

சொற்பொழிவு நிகழ்த்தும் நாளன்றே இந்நூல் வெளி வருவது சிறப்பாகும். சொற்பொழிவாளர் முன்னை உயர்நீதிமன்ற நடுவர் மாண்புநிறை இரத்தினவேல் சதாசிவம் அவர்கள் தம் உரையை முன்னரேயே தட்டச்சு செய்து அனுப்பி வைத்ததால், சொற்பொழிவு நிகழ்த்தும் போதே நூல் அச்சுருப்பெற்று வெளிவர ஏதுவாயிற்று.

எதிலும் தமிழ் வளரவேண்டும்; எங்கும் தமிழ் வாழ வேண்டும் என்ற நோக்கு இந்நூல் முழுதும் புலப்படக் காணலாம். இந்நோக்குச் செயற்படுவதற்கான வழிமுறை களையும் இந்நூலாசிரியர் விளக்கிக் காட்டியுள்ள திறம் போற்றுதற்குரியதாகும்.

தமிழ் எழுத்துச் சீரமைப்பு, கலைச்சொல்லாக்கம், மொழி பெயர்ப்பு, அறிவியல் தமிழ், தமிழை எல்லாத் துறை களிலும் பயிற்சிமொழி ஆக்குதல் முதலியன பல கோணங் களில் தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படைகளை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். இவர் சட்ட வல்லுநராதலின் தமக்கேயுரிய வாதத் திறமையோடும், புலமை நயத்தோடும் கருத்துகளை முறைப்படுத்தி வழங்கி யுள்ள போக்குப் பாராட்டுதற்குரியது.

கருத்து வேறுபடும் இருசாரார்தம் வாதங்களையும் நிரல்பட வைத்துத் தெளிவு நல்குர் திறம், இவரது நடுநிலைப் பண்பைக் காட்டுகிறது. தம் கருத்துக்கு அரணாக, இத் துறையில் ஈடுபட்டு உழைத்து வருபவர்களின் குறிப்புக் களையும் இந்நூலாசிரியர் எடுத்து விளக்குகிறார்; நீண்ட காலமாகவே சட்டத்துறைப் பெருமக்கள் தமிழின் ஆக்க பூர்வமான முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட திறத்தையும் காட்டுகிறார்.

தமிழ், அறிவியல் துறையில் மேம்படுவதற்கு ஆங்கிலத் தின் துணை தேவையென்பதைத் தொலைநோக்கு உணர்வோடு இவர் வலியுறுத்தியுள்ளார். இதற்குச் சான்றாக, "அகில இந்திய மருத்துவ, பொறியியல் கருத் தரங்குகளில் பொது மொழியாக ஆங்கிலம் இல்லாவிடில், இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து வரும் தம்தம் மொழி யில் பயிற்சி பெற்றவர்கள் அறிவியல் ஆய்வுகள் நடத்துவது கடினம். உலகத்தில் பல நாடுகளில் நடக்கும் அறிவியல்

ஆய்வரங்கங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புத் தமிழ் நாட்டினர்க்கு இல்லாமல் போய்விடக் கூடாது. மேல் பட்டப் படிப்புப் பயில்பவருக்காவது பரவலாகப் பயன்படும் ஆங்கிலம் அவசியம் என்பதை மறுக்கமுடியாது'' (ப. 59) எனும் பகுதியைக் காட்டலாம்.

''செய்வன இவை; செய்யத்தகாதன இவை'' என்று இந்நூலாசிரியர் சுட்டிக்காட்டி விளக்கும் போக்கும் குறிப் பிடத் தகுந்ததாகும். கலைச் சொற்களைத் தமிழ்ப்படுத்த வேண்டிய முயற்சியில் செய்யத் தகாதவற்றைப் பற்றி, ''ஒவ்வொருவரும் ஓர் ஆங்கிலச் சட்டச் சொல்லுக்கு அநேகத் தமிழ் மொழிபெயர்ப்பும், மொழியாக்கமும் செய்ய முயன்றால் பொருள் மயக்கமும் குழப்பமும் மிகுந்துவிடும். அந்நிலை வாராது தடுக்கவேண்டும்'' (ப. 50) எனக் கூறும் பகுதி சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

தமிழை எல்லாத் துறைகளிலும் பயிற்று மொழியாக்க வேண்டும் என்று ஈடுபட்டு உழைப்போர்க்கும், அறிவியல் தமிழை உருவாக்கவேண்டும் என்ற முனைப்புக் கொண்டோர்க்கும் இந்நூல் உற்றுழி உதவும் என்று நம்புகின்றேன்.

*பாரதிதாசன் பல்கலைக் கழகம்*
*பல்கலைப் பேரூர்*
*9-8-89*

*முனைவர்* **ச. முத்துக்குமரன்**
*துணை வேந்தர்*

# '' எங்கும் தமிழ் எதிலும் தமிழ் ''

மதிப்பிற்குரிய காலஞ்சென்ற டாக்டர் ந. சஞ்சீவி ஏற்படுத்திய இராம, இலட்சுமண, நாராயண, நடேச நிலைக் கட்டளைச் சொற்பொழிவுகளில் "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்ற தலைப்பில் உரையாற்றும்படி என்னை அழைத்த பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கு முதற்கண் என் நன்றி உரித்தாகுக. 1959-ஆம் ஆண்டில் நடந்த சைவ சித்தாந்த மகா சமாசம் 54-ஆம் ஆண்டு விழாவில், மாநிலக் குற்ற இயல் முதன்மை நீதிபதியாகப் பணி புரிந்த நான், ''சுந்தரர் வழக்கும், சேக்கிழார் வாக்கும்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையாகக் கொடுத்துச் சொற்பொழிவாற்றினேன். திரு. சஞ்சீவி, காஞ்சிபுரம் பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவர். சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை ஆற்றிய பொழுது, இளைஞர் களின் ஒழுங்கின்மையைக் குறிப்பிட்டு, வாழ்க்கையில் ஒழுக்கமே உயிர் என்னும் கருத்தை வலியுறுத்தினார். அந்த மாநாட்டில்தான் அவரை முதலில் சந்தித்தேன். அவர் மனைவி திருவாட்டி கிருஷ்ணா சஞ்சீவி, '' பிள்ளை வளர்ப்பில் சைவம் '' என்ற தலைப்பில் பேசினார். நான் தலைமை தாங்கிய அநேகச் சட்ட, சமூகக் கருத்தரங்குகளில் டாக்டர் சஞ்சீவி கலந்து கொண்டார். 1987-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறையில் தலைமை வகித்த டாக்டர் சஞ்சீவி, '' வாழ்க்கை நோக்கில் இலக்கியக் கல்வி'', '' அறிவியல்வழி அறம் '' என்ற ஐந்து நாள் பணித்திட்டம் நடத்தினார். அதில் இறுதி நாள் அவர் விருப்பப்படி நான் முடிவுரை

ஆற்றினேன். தாம் நிறுவிய நிலைக் கட்டளைச் சொற்பொழிவாற்ற வேண்டுமென்ற அவர் விருப்பத்திற்கிணங்க இன்று வந்து இறைவனருளால் இப்பணியை என்னால் இயன்ற வரையில் பொறுப்புடன் செய்வது என் கடமை.

**மொழியின் முக்கியத்துவம்**

"ஒரு நாட்டை நீங்கள் அரசாள வேண்டி வந்தால், முதற் செயலாக யாது செய்வீர்?" என்று கன்ப்யூஷியஸ் என்னும் சீன ஞானியை ஒரு சமயம் சிலர் வினவினர்.

"முதல் முதலாக, உறுதியாக மொழியைத்தான் சீர் திருத்துவேன்" என்றார் ஞானி.

இப்பதிலைக் கேட்டவர் பெரிதும் வியந்தனர். "மொழிக்கும் அரசாள்வதற்கும் என்ன தொடர்பு? ஒரு தொடர்பும் இல்லையே! அரசாள்வதற்கு மொழியை ஏன் சீர்திருத்த வேண்டும்?" என்று வினவினர்.

"மொழி உரிய வகையில் இல்லாவிடின், நினைத்ததை நினைத்தவாறு சொல்ல இயலாது; நினைத்ததைச் சொல்லாவிடின், செய்ய வேண்டுவதை உரியவாறு செய்யார்; செய்ய வேண்டுவதைச் செய்யாவிடின், ஒழுக்கமும் கலையும் சீர்குலையும்; அவை சீர்குலையின் நடுநிலை (நீதி) வழுவிப் போய் விடும்; நடுநிலை நழுவின், மக்கள் திக்கற்றவராய்க் குழம்பித் தவிப்பர். அதனால், மொழியை அவரவருக்குத் தோன்றியபடி கையாள விடக்கூடாது. பிறவற்றைவிட முதற்கண் மொழியைச் சீர்திருத்துதலே மிகவும் முக்கியமானது" என்றார் ஞானி.

**தமிழின் சிறப்பு**

தமிழ் மொழியைச் சீர்திருத்த வேண்டுமா என்பதையும் எந்த வகையில் சீர்திருத்த வேண்டும் என்பதையும் ஆராய்வது நமது கடமை. நம் மனத்தில் தோன்றும் எண்ணங்களைப்

பிறருக்கு அறிவிக்க வேண்டுமென்றால் அதற்கு மொழி என்னும் கருவி வேண்டும். மொழிகளுள் தமிழ் மிகவும் பழைமையானது ; காலங் கடந்தது. "தமிழ் மொழி எப்பொழுது தோன்றியது? யாரால் தோன்றியது?" என்னும் ஆராய்ச்சிகளுக்கு முடிவே இல்லை. "தமிழ் என்னும் மூன்றெழுத்துச் சொல்லினைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன; நடக்கின்றன; இனியும் நடந்து கொண்டிருக்கும்.

இந்தியாவின் தென்பகுதியிற் பேசப்படும் மொழியாகையால் "தென்மொழி" எனவும் அது வழங்கப்படுகிறது. தென்மொழி என்பது மருவித் 'தமிழ்' என்று வழங்குகிறது என்பார் சிலர். தமிழ் என்பது இனிமை, எளிமை, அழகு எனும் முப்பொருளைத் தரவல்லது. கீழ் மட்டத்திலுள்ள மக்கள் பேசும் தமிழ் கொடுந்தமிழாய் இருக்கிறது. அதனைக் கொச்சைத் தமிழ் என்பர். இலக்கிய, இலக்கண மரபுடைய தமிழைச் செந்தமிழ் என்பர். வீரமாமுனிவர் அவர்கள் செந்தமிழ், கொடுந்தமிழ் இலக்கணங்களை எழுதியிருக்கிறார். இந்த நூற்றாண்டில் கிறித்துவப் பாதிரிகளுக்குத் தமிழ் கற்க ஆர்டன் எழுதிய தமிழ் இலக்கண நூலிலும் கொச்சைத் தமிழ் இடம் பெறுகிறது. திருஞானசம்பந்தர் தம் பதிகங்களினிறுதியில், 'நற்றமிழ் ஞான சம்பந்தன்', 'செந்தமிழ் ஞான சம்பந்தன்' எனத் தமிழ்ப் பெயரைக் குறித்துள்ளார் ; 'நற்றமிழ், செந்தமிழ்' முதலிய சொற்களை அடை மொழிகளாய்ப் பயன்படுத்தியிருக்கிறார்.

"திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைக்கு எழுந்தருளிய போது, அங்குள்ள கோவில் கொடி மரத்தருகில் இனிய தமிழ் மணம் வீசுகிறதே என்று அவர் குறிப்பிட, உடனே அவ்விடத்தில் தோண்டிப் பார்த்த போது, அங்குத் திருமந்திரச் சுவடிகள் அகப்பட்டன" வெனத் திருவாவடுதுறைப் புராணம் கூறுகிறது.

மூலன் உரைத்த மூவாயிரம் தமிழ், சிவன் எனும் பரமனை உணர்த்தும் மந்திரமாதலின், அத் திருமந்திரம் தெய்வத் தமிழ் என்பதில் ஐயமில்லை.

தமிழில் தோன்றிய பேரிலக்கியங்கள் அனைத்தும் சமயத் தொடர்புடையனவாய் இருத்தலை ஆராயும் பொழுது சமயம் தமிழை வளர்த்ததா அல்லது தமிழ் சமயத்தை வளர்த்ததா என்ற ஐயம் பிறக்கிறது.

பண்டைக் காலத்தில் சமயம் வேறு, சட்டம் வேறு என்று பிரிக்கப்படவில்லை. அறநெறி வேறு, சட்ட நெறி வேறு என்னும் கருத்து நாளடைவில்தான் உலகத்தில் பலவிடங்களிலும் பரவியது என்பதில் யாதொரு ஐயமுமில்லை. மனுதர்ம சாஸ்திரம், யூதர் மூதாதையன் மோசஸ் தொகுத்த சட்டம் முதலிய நூல்களை ஆராய்ந்து பார்த்தால், மேற்சொன்ன கருத்து நன்கு புலனாகும். அற விதிகளையும், சமய விதிகளையும், சட்ட விதிகளையும் யாதொரு வேறுபாடுமின்றி, பண்டையோர் ஏற்று ஒழுகி வந்தனர். நாளடைவில் சமய வாழ்க்கை வேறு, சமூக வாழ்க்கை வேறு என்ற கொள்கை பரவப்பரவச் சமய விதிகளுக்கும், சட்ட விதிகளுக்கும் உள்ள தொடர்பு அல்லது சம்பந்தம் என்ன என்ற கேள்வியைப் பற்றிச் சட்ட வல்லுநர்களிடையே கருத்து வேற்றுமை வளர்ந்தது. திரு. மா. சண்முக சுப்பிரமணியம் இயற்றிய "குறள் தரும் சட்ட நெறி" எனும் நூலில் சட்ட நெறிகள் பலவும், அறநெறிகளை ஒட்டி எழுந்தவை; எனவே, அற நெறிகளில் சில, சட்ட நெறிகளுக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றன என்று விளக்கியிருக்கிறார். நான் எழுதிய 'அறமும் சட்டமும்' என்ற கட்டுரையில் "தீங்கியல் சட்டத்தின் முக்கியக் கொள்கைகள் அறக்கருத்துகளைப் பின்பற்றி அமைந்திருக்கின்றன" என்று கூறியிருக்கிறேன்.

திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை, எம். எல். பட்டம் பெற்றதால் அவரை எம். எல். பிள்ளை என்று சொல்லு வார்கள். அவர் சென்னைச் சட்டக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். ஆங்கிலத்தில், '' குற்ற இயல் சட்டம் '' என்ற ஒரு நூலை இயற்றினார். குற்ற இயல் விஞ்ஞானத்தைப் பற்றிப் புகழ்பெற்ற ''தாகூர் சொற்பொழிவு'' ஆங்கிலத்தில் ஆற்றினார். அவர், தமிழில் சட்டநூல் இயற்றும் திறமை படைத்தவர். ஆனால் அன்று இருந்த சூழ்நிலையில் அத் துறையில் அவர் ஈடுபடவில்லை. மற்றும் தமிழில் புலமை பெற்ற வழக்குரைஞர்கள் பலர் தமிழ்த் துறையில் ஈடுபட்டு அரும்பெரும் தொண்டு செய்து இருக்கிறார்கள். கோவைத் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், திருவாசக மணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் முதலியோர் சட்டம் பயின்று வழக்குரைஞர்கள் ஆகப் பணியாற்றும் வாய்ப்பிருந்தும், தங்கள் வாழ்க்கையை, சைவ சமய நூல்களை எழுதுவதற்கும், சொற்பொழிவு ஆற்றுவதற்கும் அர்ப்பணித்தனர். இவ்வாறு தமிழில் புலமைபெற்ற வழக்குரைஞர்கள் பலர் தமிழ்த்துறையில் ஈடுபட்டு அரும் பெரும் தொண்டு செய்து இருக்கிறார்கள். அவர்கள் நூல்கள் வாயிலாகச் சட்டச் சொற்கள் தமிழில் நமக்குக் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கிறது.

1959 ஆம் ஆண்டு நான் மாநில முதன்மைக் குற்றவியல் நீதிபதியாக இருந்த சமயத்தில், சைவ சித்தாந்த மாநாட்டில், 'சுந்தரர் வழக்கும், சேக்கிழார் வாக்கும்' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவு ஆற்றினேன். அதில் சுந்தரர் காலத்து வழக்கிற்கும், இக்கால வழக்கிற்கும் உள்ள வேறுபாட்டையும், அக்காலத்திலேயே நாகரிகம் மிகுந்து காணப்பட்டது என்ற கருத்தினையும் வெளியிட்டேன். பெரிய புராணத்தில் அநேகத் தமிழ்ச் சட்டச் சொற்கள் இருப்பதை எடுத்துக் காட்டினேன். அதனைப் பின்வரும் சொற்பொழிவின் பகுதியில் நன்கு காணலாம்;

"பண்டைக் காலத்தில் ஒருவன் தன்னையும் தன் சந்ததியாரையும் பிறருக்கு அடிமையாக்கிக் கொள்ளும் வழக்கம் பல தேசத்திலுமிருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. 'சுந்தரர் காலத்தில் அந்தணர் மற்றோர் அந்தணர்க்கு அடிமையாகும் வழக்கம் இல்லை' யென்பது அவர் வழக்கிலிருந்து தெரிகிறது. அதனால்தான் கிழ வேதியரின் வழக்கைக் கேட்டு ஊரார் நகைத்தனர். சுந்தரரும் அவரைப் பித்தனென்றார்; அவர் அந்த வழக்கைப் 'பிழை நெறி வழக்கென்றார்'. உலகியலில் காணப்படாத, கேட்கப்படாத, ஓர் உரிமையைக் குறித்த வழக்காதலின், 'பிழை நெறி வழக்கு' எனப்பட்டது. திருவெண்ணெய் நல்லூர் அந்தணர் மன்றத்தில் இவ்வித வழக்கு எவ்விதம் கொண்டு வரமுடியும் என்ற பொழுது, கிழ வேதியர் "வழக்கு வந்தவாறு இசைவே யன்றோ" என்றார். அதாவது 'ஒப்பந்தப்படி வரும் வழக்குப் பொருத்தமான வழக்கு' என்று மன்றாடினார். இவ்விதம் வாதிக்கத் தற்காலச் சட்டம் இடங் கொடாது. இது நமக்கு வியப்பைத் தருகிறது.

இவ்வழக்கின் வரலாற்றினைச் சேக்கிழார் வாயிலாக நாம் ஆராய்கின்ற பொழுது, இக்கால வழக்கில் உள்ள சட்ட நியாய நுணுக்கங்கள் அக்காலத்திலுமிருந்தன என்பது நமக்குப் புலனாகிறது. சுந்தரர், சிவனைப் 'பழைய மன்றாடி போலும்!' என்றார். இங்கு மன்றம் என்பது மரத்தடியைக்' குறிக்கும். முற்காலத்தில் நியாய அவை மரத்தடியில் கூடியதென்றும், வழக்கினை அவையோர் முன்கொண்டு வருதல், வாதித்தல், பிரதி வாதித்தல், அதைத் தீர விசாரித்துத் தீர்ப்புச் சொல்லும் முறை ஆகியவை அக்காலத்திலுமிருந்ததாகத் தெரிகிறது. இது மட்டுமின்றி ஒரு வழக்குச் செவ்வனே தீர்க்கப்பட, ஆட்சி, ஆவணம், அயலார் காட்சி (சாட்சி) ஆகிய மூன்றிலொன்றைத் துணையாகக் கொண்டார்கள் என்பதும் புலனாகின்றது.

நமது இந்தியச் சான்றியல் சட்டத்தில், ஒரு வழக்கைத் தீர்ப்பதற்கு வேண்டிய சாதனங்கள் இவையே என்று தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்து சான்றியல் சட்டத்தில் 114-வது பிரிவின்படி, சாதாரணமாய் நடந்து வருகின்ற பழக்க, வழக்கங்களை நீதிபதி யோசித்து, சில நிகழ்ச்சிகள் உண்டாகி இருந்தனவா என்பதை நிச்சயித்துக் கொள்ளலாம். இந்த விதியைக் கிழ வேதியர் பொருத்தமாய்த் தம் வழக்கிற்குப் பயன்படுத்திக் கொண்டார் என்பதைச் சேக்கிழார் தம் வாக்கால் நமக்குத் திறம்படத் தெரிவிக்கிறார். ஆனால், இந்த விதி மூல ஓலையிருக்கும்பொழுது படி ஓலைக்கும் பொருத்தமாகாது. தற்பொழுது காணப்படும் பிரதம சாட்சியம் (முதல் நிலைச் சான்று), உப சாட்சியம் (சார் நிலைச் சான்று) என்ற வேற்றுமை, முற்காலத்தில் இல்லையென்று சொல்வதற்கில்லை. சுந்தரர் வழக்கின் முற்பகுதியில் கிழிபட்ட ஓலையைப்பற்றி விவாதிக்கும் பொழுது, கிழ வேதியர், அது படி ஓலையென்று கூறி, மூல ஓலையைக் காண்பித்தார் என்பதிலிருந்து நாம் சந்தேகப்படுவதற்குக் கூட இடங்கொடுக்கவில்லை.

வழக்கிலுள்ள ஆவணத்தை, நியாய மன்றத்தில் உதவியாளர் படிப்பதுபோல், முற்காலத்தில் காரணத்தார் வாங்கிச் சபையோர் கேட்க வாசிக்கும் முறை இருந்ததாகத் தெரிகிறது. ஆவணம் எப்படி எழுதப்பட வேண்டும், அது எப்படி நிரூபிக்கப்பட வேண்டும் என்பனவற்றைக் கவனிக்கும் பொழுது, அக்காலத்து நடைமுறைக்கும் இக்காலத்து நடைமுறைக்கும் அதிசயப்படத்தக்க ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

சுந்தரரின் பாட்டனார் ஓலையில் "இருமையால் எழுதி நேர்ந்தேன், இதற்கிவை என்னெழுத்து" என்று கையொப்பம் இட்டதாகத் தெரிகிறது. மனமும் வாக்கும்

ஒன்றுபட்டு எழுதின பத்திரமே செல்லுமென்பது நமக்கு நன்றாகத் தெரிந்ததாகும். அவையோர் சுந்தரரைப் பார்த்து, இந்த ஓலையில் காணப்படும் கையெழுத்து உங்கள் பாட்டனாருடையதா என்று நீங்கள் பார்த்துச் சொல்லுங்கள் என்றார்கள். கிழ வேதியர் குறுக்கிட்டு, "இவன் பாட்டனாரின் கையெழுத்தைப் பற்றி இவனுக் கென்ன தெரியும்? இவன் பாட்டனார் எழுதி வைத்த கைச்சாத்து வேறுண்டாகில் அதை இந்த ஆவணத்தோடு ஒப்பிட்டுப்பாரும்'' என்றார். அவர்கள் அவ்வாறே செய்தனர். இரண்டு கையெழுத்தும் ஒத்திருந்ததைக் கண்ட அவையோர், வேதியர் பக்கம் தீர்ப்பளித்தார்கள். அந்த ஓலையில் மேலெழுத்துப் போடப்பட்டிருப்பதாகத் தெரி கிறது. மேலெழுத்திட்டவர்கள் மூலம் ஒரு பத்திரத்தை ஓரளவு நிரூபிக்கலாம். ஆனால், அவர்களுக்குப் பத்திரம் எழுதிக் கொடுத்ததாக ஞாபகமில்லாவிட்டால், எழுதிக் கொடுத்தவரின் கையெழுத்தை அவருடைய வேறொரு கைச்சாத்திலுள்ள கையெழுத்தோடு ஒப்பு நோக்கித் தீர்ப்புக் கூற வேண்டும். இதே முறைதான் சுந்தரர் வழக்கிலும் காணப்படுகிறது. இது போன்ற பல காரணங்களால் நாகரிகம் மிகுந்து காணப்படும் இக்கால வழக்கினைப் போன்றே சுந்தரர் காலத்திலும் வழக்குகள் நடைபெற்றன என்பது தெரிகிறது.

''ஆங்கிலேயர் வருதற்கு முன் வான நூலைத் தவிர, வேறு விஞ்ஞான நூல்கள் தமிழ்மொழியிலும், ஏனைய இந்திய மொழிகளிலுமில்லை'' என்று மயிலை சீனி வேங்கடசாமி அவர்களும், மற்றும் சிலரும் கருதுகிறார்கள். ஆனால், தென்னிந்தியாவிலுள்ள சிறப்பான திருக்கோயில்களும், மதுரை, காஞ்சிபுரம் முதலிய நகரமைப்பும், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு அமைக்கப்பட்ட கல்லணையும், திரை கடலோடித் திரவியம் சேர்க்க அயல்நாடுகளுடன் கொண்ட

வாணிகத் தொடர்பும், பொறியியல் முதலிய அக்காலத்து அறிவியல் முன்னேற்றத்திற்குச் சான்றுகளாகும். அக்காலத்து அறிவியல் நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லையென்பதால், தமிழர்கள் அறிவியலாற்றல் படைத்தவர்கள் அல்லர் எனக் கருதுதற்கில்லை. ஆனால், தற்கால அறிவியலை வைத்து அக்கால அறிவியலை மதிப்பீடு செய்வது முறையாகாது.

**அன்றைய இங்கிலாந்தில் ஆங்கில மொழியின் நிலை**

இங்கிலாந்தில் பத்தாம் நூற்றாண்டில் நீதி மன்றங்கள், லத்தீன் (Latin), பிரஞ்ச்சு (French) மொழிகளில் இயங்கின தாக அறிகிறோம். மக்களின் தீவிரக் கிளர்ச்சியினால் அவை மக்கள் மொழியாகிய ஆங்கிலத்தில் பின்பு நடைமுறைகளைக் கொண்டனவாம். இங்கிலாந்தில் ஆங்கிலம் நீதிமொழியாக ஆக்கப்பட்டிருந்தும், அங்கிருந்த வழக்கறிஞர்கள் அம்மொழியைப் பேசுவதாக இல்லை. இப்பிரச்சினைக்கு முடிவுகட்ட எழுந்த இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றம், இரண்டாம் ஜார்ஜ் மன்னர் ஆட்சியில் 1731 ஆம் ஆண்டில் சட்டம் ஒன்றை இயற்றியது. அதற்குப் பின்னர் தான் ஆங்கிலம் நீதிமன்ற மொழியாகச் சரிவரப் பயன் படுத்தப்பட்டது. இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் இங்கிலாந்தில் சட்ட வளர்ச்சிக்கேற்ப மொழியும் வளர்ந்திருக்கிறது. நம் நாட்டில் காணப்படும் மொழியின் தேக்க நிலை அங்குக் காணப்படவில்லை.

விஞ்ஞான, தொழில் நுட்பக் கருத்துகளை மேல் நாட்டில் அத்துறைகளிலுள்ள எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் லத்தீன் (Latin) மொழி பயன்பட்டது. ஆனால் 17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நியூட்டனும், இத்தாலியில் காலிலியோவும், பிரான்சில் டெச்கார்டிசும் வழக்கமான மரபை விட்டுத் தம் தம் மொழிகளில் தங்கள் ஆராய்ச்சிகளை வெளிப்படுத்த முயன்றனர். இதன்

விளைவாக ஆராய்ச்சியால் வளரும் அறிவியல் பரவுதற்குத் தடங்கல் ஏற்பட்டது. உலக மொழி ஒன்றிருந்தால் இத்தகைய தடங்கல்கள் நீங்கும். ஆனால், இது செயல் முறைக்கொவ்வா உயர் கனவு நிலை (Utopia) யாகவே இருந்தது.

உலகில் புதிதாக ஒரு கருத்துத் தோன்றும்போது அக்கருத்தை வெளிப்படுத்தற்குரிய சொல்லும் உடனே தோன்றுகிறது. கலையும், அறிவியலும் புதுப் பொருள்களை ஆக்கியளிக்குங்கால் அவற்றுக்குரிய சொற்களும் மலர்ந்து விடுகின்றன. எனவே கலை, அறிவியல் கண்டு பிடிப்புகளால் ஒரு மொழியின் சொல்வளம் பெருகுகிறது. பொருள் கண்டுபிடிப்புடன் சொற் கண்டுபிடிப்பும் ஒரே காலத்தில் நிகழ்கின்றது. மேல் நாடுகளில் அறிவியல் வளர்ச்சியோடு மொழிகளும் வளர்ந்து வருகின்றன. சட்டமும் ஒரு அறிவியல். ஆங்கிலத்தில் சட்டப் பிரசித்தி பெற்ற ஹோல்ட்ஸ்வர்த் இயற்றிய பகுதிகள் பல கொண்ட ''சட்டச் சரித்திர நூல்'' மூலமாகச் சட்ட வளர்ச்சிக்கேற்ப ஆங்கில மொழி வளர்ச்சியும் அமைந்தது என்பதை நாம் அறியலாம். இவ்வாறு அறிவியல், சட்ட இயல்துறைகளும் இவற்றுக்கான மொழித் துறையும் ஒன்றோடொன்று இணைந்து வளர்ந்தன. மேலும், ஒன்றின் வளர்ச்சி மற்றொன்றின் வளர்ச்சிக்கு உதவி நின்றது. மொழி வளர்ச்சிக்கு என்று தனி முயற்சி ஏதும் இல்லாமலேயே, வளரும் அறிவியலோடு அறிவியல் ஆங்கிலமும் வளம் பெற்றது.

ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் புதிய விஞ்ஞான, தொழில் நுட்பக் கருத்துகளை மொழிபெயர்ப்புச் சாதனைகள் மூலம் பெற வேண்டும். இதன் விளைவாக ஐரோப்பிய மொழி பெயர்ப்பு மையம் (E. T. C.) முதலிய

நிறுவனங்கள் இப்பணியில் ஈடுபட்டிருக்கின்றன. லத்தீனுடைய வீழ்ச்சி மட்டும் இத்தச் சூழ்நிலைக்குக் காரணம் என்று சொல்வதற்கில்லை. தேசங்களின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் சில நாடுகளின் அதிக அறிவியல் ஆராய்ச்சி முன்னேற்றமும், ஒரு மொயிழின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருந்தன. தற்சமயம் ஆங்கிலமொழி அறிவியலில் நூற்றுக்கு ஐம்பது சதவீதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அடுத்த இடத்தை ருசிய நாட்டு மொழி பெற்றிருக்கிறது. ஆனால் ஜப்பான், சைனா, பிரெஞ்ச்சு, ஜெர்மன் மொழிகள் அறிவியலில் முன்னேற்றத்திற்குப் போட்டியிடும் என்பதற்கு ஐயமில்லை. ஐரோப்பிய நாட்டு மொழிகளை விலக்கினால், இதர மொழிகளில் அறிவியல் முன்னேற்றம் நூற்றுக்கு மிகக்குறைந்த சதவீதம்தான் தேரும்.

**ஆங்கிலத்தின் முக்கியத்துவம்**

''தாய்மொழியே கல்விப்பயிற்சி மொழியாக இருக்க வேண்டும்'' என்பதுதான் கல்வித்துறை அறிஞர்களின் ஒருமித்த கருத்தாகும். ஆனால், நம் இந்திய நாட்டின் வரலாற்றுப் பின்னணியால் இதை முழுவதுமாக நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் பல எழுகின்றன. பல்வேறு மாநிலங்களில் பல்வேறு மொழிகள் நீண்ட நெடுங்காலமாக நிலவி நிலைத்துள்ளன. ஆங்கிலேயர் ஆட்சியினால் இந்திய மொழிகள் காலத்திற்கேற்ப வளர்ச்சி பெறவில்லை. கடந்த நூறு ஆண்டுகளாக ஆங்கில மொழியே கல்விப் பயிற்சி மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் வளர்ந்துள்ளது. எனவே, ஆங்கிலத்தை நாம் கைவிடவும் முடிவதில்லை. உலகத்து அறிவியல் வளர்ச்சியை உற்ற முறையில் விரைந்து கற்பதற்கும் ஆங்கிலம் இன்றியமையாததாகின்றது. எனவேதான், தாய்மொழியில் உயர்கல்வி என்ற கொள்கையினை நிறைவேற்றுவதில் ஐயப்பாடும், அயர்வும் குறுக்கிடுகின்றன.

இந்தியா உலகத்திலுள்ள மற்றத் தேசங்களுடன் பெரிதும் கலந்து கொள்ள வேண்டும். ஆகையால் எல்லாத் தொழில் முன்னேற்றத்திற்கும், வியாபாரத்திற்கும், பொது வாழ்வுக்கும் தற்காலத்தில் நம் நாட்டு மாணவர்கள் மேல் நாட்டு மொழி ஒன்று கற்றல் இன்றியமையாதது.. அநேக நாடுகளில் கற்க வேண்டிய அயல் மொழியை ஆங்கிலமாகவே அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் சட்டப்படி தேவநகரி வடிவிலமைந்த இந்தி மொழியே அலுவலக மொழி. 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலத்தையும் பயன்படுத் தலாமென்று விதிவிலக்கு இருந்தது. அந்தக் காலம் கடந்ததும், மத்திய அரசு இந்தியைத் திணிக்க முயன்ற போது தென்னிந்தியாவில், முக்கியமாகத் தமிழ் நாட்டில் கடும் எதிர்ப்பு வன்முறையில் செயல்பட்டது. இந்தி மொழி யல்லாத மாநிலங்கள், எவ்வளவு காலம் ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றார்களோ, அதுவரை அம் மொழி நீடித்திருக்கலாமென்று அப்பொழுது பிரதமராக இருந்த நேரு வாக்குறுதியளித்தார். இந்த வாக்குறுதியை அரசியல் சட்டத்தில் வேண்டிய திருத்தம் செய்து சட்ட பூர்வமாக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. ஆங்கிலத்தைத் தென்னிந்தியாவில் விலக்கிவிட்டால், தென்னிந்தியர், இந்தியைக் கட்டாயம் கற்க வேண்டிய நிலை ஏற்படும். ஆங்கிலம் வலுவாக உள்ளவரை இந்தியின் நுழைவு தடுக்கப்படலாம். ஆங்கிலம் அயலார் மொழி யென்றால், தென் இந்தியர்களுக்கு இந்தியும் வேற்று மொழி யாகவே உள்ளது.

நூற்றுக் கணக்கான ஆண்டுகள் அதிகப் பொருள் செலவு செய்து கற்ற ஆங்கிலத்தை நாம் ஏன் கைவிட வேண்டும்? தமிழ் வளர்ச்சிக்கு ஆங்கிலம் நமக்குப் பெரிய வாய்ப்பாக இருக்கிறது. ஆங்கிலத்திலிருந்துதான் அறிவியல் நூல் களைத் தமிழில் இயற்றப் பல முறைகளைப் பயன்படுத்து கிறோம். ஆங்கிலத்தை வருங்கால மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுப்பது நமது கடமையாகும்.

ஐரோப்பியப் பாதிரிமார்கள் பலர், தங்கள் சமயத்தைப் பரப்ப இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் அந்தப் பணியை நிறைவேற்றத் தமிழ் கற்று, அதன் பயனாய்த் தமிழ் வளர்ப்பதில் ஈடுபட்டனர். டாக்டர் கால்டுவெல், போப், வீரமா முனிவர் போன்றவர்கள் செய்த தமிழ்த் தொண்டுகளால் தமிழ் மொழி பெற்ற பயன் பெரிது. உரை நடை இலக்கியத்திற்குப் புத்துயிர் கொடுத்துப் பொது மக்களுக்குப் புரியும் வகையில் வழிகாட்டியாக இருந்தார்கள். அகராதிக் கலையையும் வளர்த்தார்கள்.

நான் அறுபது ஆண்டுகளுக்குமுன் கல்லூரியில் பட்டப் பயிற்சி பெற்ற பொழுது, ஆங்கிலத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்கள், கவிதைகள், 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டின் இலக்கியங்கள், ஸ்காட், டிக்கன்ஸ் போன்றவர்களுடைய உயர்தர இலக்கிய நாவல்கள் (Classics), பலவிதச் சிறுகதைகள், தொகுப்பு நூல்கள், தொகுக்கப்பட்ட பல சிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள் முதலியவற்றின் இலக்கண இலக்கியங்கள் விரிவாகவும், தெளிவாகவும் கல்லூரிகளில் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தன. அறிவியல், சரித்திரம் முதலிய இதர பாடங்களும் ஆங்கிலத்தில்தான் பயிற்றுவிக்கப்பட்டன. இராமலிங்க சுவாமிகளின் சகோதரரின் பேரன் திரு. தணிகாசலம் பிள்ளை, திரு. மணி திருநாவுக்கரசு முதலியார் முதலிய தமிழறிஞர்களிடம் தமிழ் மொழியைக் கற்றேன் எனினும், தமிழில் எனக்கு அப்பொழுது ஆர்வம் ஏற்படவில்லை. ஆனால், அந்தக் காலத்திலிருந்தே, 'தமிழ் மறுமலர்ச்சி' தோன்றியது என்பதில் ஐயமில்லை. நான் பச்சையப்பன் கல்லூரியி லிருந்த போது அமரர் திரு. அண்ணாதுரையும் அதே கல்லூரியில் படித்தார். அவர் சிறுகதைகள் எழுதுவதிலும், மேடைத் தமிழிலும் சிறந்து விளங்கினார்.

**தமிழில் தேக்க நிலை**

தமிழ்மொழி இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் எனும் நாடுகளில் கல்விப் பயிற்சி மொழியாக விளங்குகிறது. மற்றும் பர்மா, தென் ஆப்பிரிக்கா, மொறிசியஸ், அந்தமான் முதலிய பல்வேறு நாடுகளில் தமிழ்மக்கள் வாழ்கின்றனர். இந்திய சுதந்திரப் போராட்டமும், விஞ்ஞான வளர்ச்சியும் தமிழ்மொழி முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணங்கள். இந்திய விடுதலையில் ஈடுபட்ட கவி பாரதியார் தமிழர் முன்னேற்றத்திற்காகத் தம் வாணாளைச் செலவிட்டார். உயர்ந்த உள்ளக்கருத்துகளை எளிய நடையிலே எழுதுவதே 'நல்ல கவிதை' என்ற தமது கொள்கைக் கிணங்கக் கவிதை மட்டுமின்றி, வசன நடையிலும் ஒளியும், தெளிவும் நிலவும்படி எழுதிப் புகழ் பெற்றார். தற்பொழுது பரவிவரும், எளிய தமிழ் வசன நடைக்கு வழிகாட்டியென அவர் கருதப்படுகிறார். தமிழின் முன்னேற்றத்தால், தமிழர் முன்னேற்றம் எய்தல் வேண்டும் என்ற அவர் கருத்தைக் கவிதையாலும், கட்டுரைகளாலும் விளக்கியிருக்கிறார். தமிழில் அறிவியல் வளர்ச்சி வேண்டு மென்ற கருத்தை அவர் கவிதை மூலம் வெளியிட்டிருக்கிறார்.

" புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை "

" பிற நாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய
புது நூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும் "

தமிழ் மக்கள் தமது மொழியை மேன்மைப்படுத்த விரும்பினால், அவகாசம், பதவி முதலிய வசதி படைத்திருப்பவராகிய ஆங்கிலம் படித்த வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் நாம் தமிழர் என்பதை அறிந்து தமிழ் வளர்ச்சியில் ஈடுபட வேண்டும். ஆங்கிலேயர் ஆட்சிக்குப்பின் தமிழ் மொழியும், இதர இந்திய மொழிகளும், இலக்கிய, சமயத்துறைகளில் வளர்ச்சியடைந்தது போல், அறிவியலில் வளரவில்லை. இந்தத் தேக்க நிலையிலிருந்து தமிழ் மொழி பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் விளைவாகப் பல சிக்கல்களுக்கு நாம் தீர்வு காணும் நிலையிலிருக்கின்றோம். இந்தப் பெரும் பொறுப்பில் ஈடுபடுபவர்கள் மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் உண்டு என்பதை மறுக்க இயலாது. அவைகளைப் பொருட்படுத்தாமலும் இருக்க முடியாது.

சென்னையில் அரசாங்கம் ஒரு தமிழ்க் கல்லூரி கூட நடத்தவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. "தமிழ் வளர்ச்சி மன்றம்" என்ற ஒரு நிறுவனம் தமிழ்க் கல்லூரி ஒன்றை அரிய முறையில் சென்னையில் நடத்துகிறது. அதில் என் மதிப்பிற்குரிய சகோதரர் டாக்டர் ரத்தினவேலு சுப்பிரமணியம் தலைவராகவும், பண்டித நடேசனார் முதல்வராகவும், பேராசிரியர் இராம. சுப்பிரமணியம் செயலாளராகவும் பணியாற்றி, பல புகழ் பெற்ற ஆசிரியர்களை யாதொரு ஊதியமும் கொடாமல் பயன்படுத்தித் தமிழில் எம்.ஏ. பட்டத்திற்கும், வித்வான் பட்டத்திற்கும் பலருக்கும் பயிற்சியளிக்கிறார்கள். ஆனால், அவர்கள் சட்டம், மருத்துவம், பொறியியல் முதலிய துறைகளில் பயன்படுத்துவதற்காக நடைமுறை மொழிகளை வளர்க்கும் பணிகளில் ஈடுபடவில்லை. ஆனால், தஞ்சாவூரில் இப்பணியைப் பூர்த்தி செய்யத் தமிழ்ப் பல்கலைக் கழகம் முயற்சி எடுத்து வருகிறது.

**தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்**

எழுத்து என்பது ஒலிவடிவத்திற்குத் தரப்படும் வரி வடிவமே ஆகும். இதுவரை நமக்குக் கிடைத்துள்ள எழுத்துகள் மிகவும் பழமையானவை. தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் அச்சுப்புத்தகங்களில் தோன்றுதற்கு முன் நிலவிய ஓலைச் சுவடிகளிலும், கல்வெட்டுகளிலும் காணப் படுகின்றன. திரு. இரா. நாகசாமி, சென்னைத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் இயக்குநராகப் பணியாற்றியவர். 'தமிழ் எழுத்துகள்' என்ற தமது கட்டுரையில் தமிழ் எழுத்துக்கள் 'தாமிழி' யினின்று தோன்றினவென்றும், அவற்றின் வடிவம் எவ்வாறு மாறுபட்டு வந்ததென்றும் தம் கருத்தைப் பின் வருமாறு விளக்கியுள்ளார்.

'' பண்டைய தமிழக எழுத்துகளைச் சிலர் பிராம்மி என்றும் தமிழ் பிராம்மி திராவிடி என்றும் குறிக்கின்றனர். இது பொருத்தமன்று உண்மையில் இதைத் தமிழ் என்று தான் கூறவேண்டும். ஆனால் தமிழ் என்று கூறினால் இன்று நாம் வழங்கும் எழுத்துகளே நம் கண்முன் தோன்றும்; பண்டைய எழுத்துகள் தோன்றா. அத்துடன், பண்டைய தமிழ் எழுத்துகளிலிருந்து கிரந்தம், வட்டெழுத்து, கண்ணெழுத்து, மலையாளம் முதலிய பல எழுத்துகள் தோன்றியுள்ளதும் மறந்துபோம். எனவே பண்டைய தமிழ் எழுத்துகளை ஒரு பெயரால் அழைத்தல் வேண்டும். அஃது அவ்வெழுத்துகள் வழங்கி வந்த காலத்து நிலவிய பெயராக இருக்குமானால் சாலச் சிறந்ததாக இருக்கும். நல்வசமாக இதுபற்றி அரிய செய்தியைச் 'சமவாயாங்கனசுத்த' என்றநூல் நமக்குக் கூறுகிறது. இந்நூல் கிறித்துவுக்கு ஒரு நூற்றாண்டிற்கு முந்தியது. இந்நூலில் 18 வகை எழுத்துகள் குறிக்கப் பட்டுள்ளன. அவற்றில் தாமினி (தாமிழி) என்ற ஒரு பெயர் காணப்படுகிறது. இது தமிழகத்தில் வழங்கிய எழுத்துகளைக் குறிக்கும் என்பது வெளிப்படை. இதே நூலிலிருந்துதான்




படம் - 1

திரு. மணவை முஸ்தபாவின் "காலம் தேடும் தமிழ்" எனும்




படம் - 3

நூலில் தமிழ் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாறுதல்களை விளக்கும் பட-




படம் - 3

அசோகர் எழுத்துகளின் 'பிராம்மி' என்ற பெயரும் காணப் படுகிறது. எனவே தாமிழி என்ற பெயர் பண்டைய பெயராகவும், பின்னால் தோன்றிய பல எழுத்துகளின் தாய் என்பதைக் குறிப்பதாகவும் உள்ளது. இதைத் தாமிழி என்று அழைப்பதே பொருந்தும் என்பது இவ்வாசிரியரின் கருத்து. தாமிழி எழுத்துகளிலிருந்து தமிழ் வட்டெழுத்து, கிரந்த எழுத்துகள் முதலிய தமிழகத்துக்கே தனிச் சிறப்பு வாய்ந்த எழுத்துகள் வளர்ந்த விதம் மிகவும் போற்றத்தக்க தாகும். கல்வெட்டுகளிலிருந்தும், செப்பேடுகளிலிருந்தும் எழுத்துகள் எவ்வாறு இருந்தன என்று உறுதியாகக் காட்ட முடியும். காலப்போக்கிலே சில அரும்பிப் படிப்படியாக வளர்ந்து நல்ல மலராகத் திகழ்வதைப்போல் தமிழ் எழுத்து களின் வளர்ச்சி காணப்படுகிறது.'' (படம் 1) ''இன்றைய தமிழ் எழுத்துகளின் மலர்ச்சியை அறியவும், பண்டைய தாமிழி எழுத்துகளை அறிதல் மிக மிக இன்றியமையாத தாகும்''. அநேக அறிவியல் அறிஞர்கள் இந்தக் கருத்தைச் சில மாறுபாடுகளுடன் விளக்கியிருக்கிறார்கள். டாக்டர் வா. செ. குழந்தைசாமியின் ''அறிவியல் தமிழ்'' எனும் நூலில் எட்டாம் அதிகாரத்தில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 19-ஆம் நூற்றாண்டு வரை தமிழ் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாறுதல்களைப் படங்கள் மூலம் காண்பித்திருக் கிறார் (படம் 2). அவர் வெ. சுந்தரம் எழுதிய 'கல் சொல்லும் கதைகள்' என்ற நூலை ஆதாரமாகக் கொண்டிருக்கிறார். மணவை முஸ்தபாவின் ''காலம் தேடும் தமிழ்'' எனும் நூலில் அதே நூற்றாண்டுகளில் தமிழ் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாறுதல்களைப் படங்கள் மூலம் காண்பித்திருக் கிறார் (படம் 3). அவர் சா. கணேசனுக்கு அப்படத்தைப் பயன்படுத்தியதற்கு நன்றி செலுத்தியிருக்கிறார். இவர்கள் இருவரும் எழுத்துச் சீரமைப்பில் காட்டும் ஆர்வம் பாராட்டத் தக்கது.

'தமிழ் வரிவடிவங்கள்' என்ற கட்டுரையில் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த டாக்டர் சி. இலக்குவனார் கீழ்க்காணும் மாறுபட்ட கருத்தை விளக்கியிருக்கிறார் :

பண்டைத் தமிழர்கள் ஓலைச் சுவடிகளில் எழுத்தாணி களினால் எழுதியதனால், இடச்சுருக்கத்தையும், உழைப்புச் சுருக்கத்தையும் கருதி, மெய்யெழுத்துகளிலிருந்தே உயிர்மெய் எழுத்துகளையும் படைத்துக் கொண்டனர். ஆகவே உயிர்மெய் எழுத்துகளைத் தனி வடிவங்களாகக் கருதல் கூடாது'' தமிழ் எழுத்துகளின் வடிவங்கள் பழமையானவை. ''தொல்காப்பியர் காலமான கி. மு. 7-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே இவை வழக்கில் இருந்துவருகின்றன. இன்றைய வரிவடிவங்கள் நூற்றாண்டு தோறும் மாறுபட்டு வருவதாகச் சிலர் கூறுகின்றனர். கல்வெட்டுகளில் காணப் படும் வரிவடிவங்கள் தம்மைக் கல்லில் பொறிக்கின்ற கல் தச்சர்களின் மாட்டாமையால் வடிவில் மாறுபட்டு வந்தனவேயல்லாமல், புத்தகங்களில் உள்ள வரி வடிவங்கள் தொல்காப்பியர் காலம் முதல் மாற்றமுறாமல் வந்துள்ளனவேயாகும். புத்தகக் கல்வி, தொடர்ந்து பயிலப்பட்டு வந்துள்ளதனால் வரி வடிவங்கள் மாறுவதற்கு இடமேது? ஆகவே இன்று நாம் புத்த கங்களில் காணும் தமிழ் வரிவடிவங்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயிலப்பட்ட வரிவடிவங்கள் என்றே அறிதல் வேண்டும். சீர்திருத்தம் என்ற பெயரால், தமிழ் எழுத்துகளை உருமாற்றம் செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று ''முத்தமிழ்க் காவலர்'' திரு. கி ஆ. பெ. விசுவநாதம் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

''எழுத்துச் சீர்திருத்தத்தின் பரப்புரை தமிழினை எங்கே போய் முடக்குமோ? இத்தீய விதை என்ன விளைவு செய்யுமோ? வளர்ச்சிக்கு மெய்யான மொழி நெறிகளை எப்படி மறைக்குமோ? ஏனைப்பல மொழிகளைக் காட்டிலும் ஒலியால், ஒலிப்பால், எழுத்தால், செறிவால், நுட்பத்தால், பண்பால், வரலாற்றால் நிறைவுடைய தூய செந்தமிழுக்கு மட்டும் ஏனை மொழிகட்கு இல்லாத எழுத்துக் குறையுண்டு என்று அன்னையின் அடிவயிற்றில் கைவைக்க வேண்டா.

இதுவே, ஒப்பியல் அறிவுடைமையாகும்'' என்று, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முன்னைத் துணைவேந்தர், அண்மையில் அமரரான டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தம் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

எழுத்துச் சீர்மைப்புப் பற்றித் தமிழ் மொழிப்பற்று உணர்வு உடையவர்களிடையே கருத்து மாறுபாடு இருப் பதைப் புரிந்துகொண்டு வரிவடிவு ஒருங்கமைப்பில் ஈடுபட வேண்டும். ஒரு மொழியின் வளர்ச்சிக்கோ, அம்மொழி பேசும் மக்களின் வளர்ச்சிக்கோ மொழியின் ஒலிக்கூறுகளின் குறைவு காரணம் எனச் சொல்வதற்கில்லை என்பது டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் அவர்களின் கருத்து. ஆனால் டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம், 'தமிழ் மொழி பெயர்ப்பில் ஒலி பெயர்ப்புத் தேவையா?' என்ற கட்டுரை யில்'' டாக்டர் கிறீன் என்பவர் ''இலத்தீன், ஆங்கிலம், ஜெர்மன் மொழிச் சொற்களை எவ்வாறு தமிழ் மொழி இயல்பிற்கேற்பத் திரித்து வழங்கலாம்'' என ஆய்ந்து வழி கண்டதுபோல நாமும் நமக்குள் ஒரு பொது வழி வகுத்துக் கொள்வோமாயின் எளிமையாய் விடும்'' என்று விளக்கி யிருக்கிறார்.

உயிர் மெய் வடிவங்களுக்கான உயிர்க்குறியீடுகள் ஒரே மாதிரி இயங்குதல் வேண்டுமென்ற சீரமைப்புப் பொதுவாக வரவேற்கப்பட்டது. தட்டச்சு, அச்சகம் முதலிய மொழியியல் பரவல் தொடர்பு சாதனங்களை எளிதில் பயன்படுத்தும் வகையில் எழுத்துச் சீரமைப்புப்பணி அமைய வேண்டும். ஓர் ஊரின் பெயரையும், தெருவின் பெயரையும் ஒரு கொள்கையில்லா முறைகேடாக மாற்றுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளை எழுத்துச் சீரமைப்பு களின் மூலம் உண்டாக்குவது தமிழுக்கு ஊறு விளைவிக்கும். டாக்டர் வா. செ. குழந்தைசாமி, எழுத்துச் சீரமைப்பைப் பற்றி அவர் இயற்றிய 'அறிவியல் தமிழ்' எனும் நூலில்

இன்று கணிப்பொறி யுகத்தில் வரி எழுத்து (Graphics) முறையில் படம் வரைவது போல் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை விளக்கியிருக்கிறார். எம்மொழியிலும் வழக்கில் இருக்கும் எழுத்தில் வரிவடிவங்கள் கணிதப் பொறி களைப் பயன்படுத்துவதில் தடங்கலாக இருக்கின்றனவா என்பதை ஆராய வேண்டும். ஆங்கிலத்திலும், இதர ஐரோப்பிய மொழிகளிலும் ரோமன் வரிவடிவத்தைப் பயன் படுத்துவது போலத் தமிழிலும் துணை வரிவடிவமாகப் பயன்படுத்தலாமென்பது டாக்டர் வ.செ. குழந்தைசாமியின் கருத்து. இக்கருத்தை ஏற்றுக் கொள்ளத் தமிழ் மக்களிடை யில் எதிர்ப்பு எழும் என்பதில் ஐயமில்லை. மணவை முஸ்தபா இயற்றிய 'காலம் தேடும் தமிழ்' எனும் நூலில் உள்ள கீழ்க்காணும் எச்சரிக்கையை மறந்துவிடக் கூடாது;

"இரண்டாயிரம் ஆண்டுகளாக உயிர்ப்போடு விளங்கி வரும் தமிழ் மொழியில் எழுத்தில் சீர்மை காணும்போது மிகுந்த கவனத்துடனும் ஆழ்ந்த சிந்தனையுடனும் அப் பணியை மேற்கொள்ள வேண்டும். அவசரம் கூடாது. எனவே, மொழிச் சீர்திருத்த எல்லையறிந்து, செயல் முறைக் கான வரையறைகளோடு, மொழியியல் வல்லுநர்களைக் கொண்டு மொழிச் சீர்மையை நிறைவேற்றுதலே சிறப் பாயமையும்." எனவே மொழியின் சீர்திருத்தத்திற்கு அவசியமான மாற்றங்களைத்தான் வரவேற்க வேண்டும்.

சென்ற மார்ச்சு மாதம் நடந்த தமிழ் மேம்பாட்டுத் திட்டக் கலந்தாய்வரங்கத்தில் டாக்டர் இ. மறைமலை, (மாநிலக் கல்லூரி, சென்னை), 'தமிழ் புதுமை மயப் படுத்தம்' என்ற தலைப்பில் அறிவித்த கருத்துகள் பயன் தருபவை எனக் கருதுகிறேன்.

"தமிழ் ஒலி மரபுக்கு மாறான ஒலி வடிவங்கள் முன் வைத்து அவற்றுக்கான குறியீடுகளைத் தேடித் துழாவி எழுத்துச் சீர்மையைப் பற்றிய தவறான எண்ணத்தையும்,

தேவையற்ற அச்சத்தையும் தமிழர்கள் மனத்தில் ஏற் படுத்தும் நிலை வருந்தத்தக்கது; தவிர்க்கப்படவேண்டியது".
"ஏற்கனவே இருக்கும் வரிவடிவமைப்பு முறையிலிருந்து மிகவும் மாறுபடாத வரிவடிவங்களை அளிக்கும் வகையில் தமிழர்களின் மொழிப்பற்று உணர்வுக்கு ஊறுவிளைக்காத வகையில் அமைதல் வேண்டும்".

இவ்வகையில் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர் களின் பரிந்துரைகள் எல்லா நிலையிலும் ஏற்கத்தக்கனவாக அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்குறியீடுகள் | ... | 11 |
| அகரம் ஏறிய உயிர்மெய் | .... | 18 |
| ஏனைய உயிர்மெய்வடிவங்களுக்கான உயிர்க்குறியீடுகள் | ... | 8 |
| ஆய்தம் | ... | 1 |
| மெய்க்குறியீடு | ... | 1 |
| | | 39 |

என்று 39 குறியீடுகளைக் கொண்ட வா. செ. குழந்தைசாமி அவர்களின் திட்டம், அனைவராலும் ஏற்கப்படவேண்டிய திட்டமாகும்.

'காலம் தேடும் தமிழ்' என்ற நூலில் மணவை முஸ்தபா ஒலிபெயர்ப்பு இலக்கணத்தைத் தெளிவாக, பல சிக்கல் களுக்குத் தீர்வு காணும் வகையில் வேறுபடும் கருத்துகளை ஆராய்ந்து எழுதியிருக்கிறார். அவைகளில் சில, சீரமைப்புக்கு உகந்ததால் குறிப்பிட வேண்டியது அவசியம். "உலகிலுள்ள பெரு மொழிகள் எவையும் தங்களுக்குள்ள குறைபாட்டினை நீக்கும் பொருட்டுப் புதிய ஒலிகளை வழங்கவல்ல புதிய எழுத்துருக்களை உருவாக்கிக் கொள்ளவோ அல்லது ஒலிக் குறையை நிறைவு செய்யும் வகையில் பிறமொழி எழுத்து களைக் கடன் வாங்கி ஏற்றுக் கொள்ளவோ விழைவ

இல்லை. தமிழைப் பொறுத்தவரை ஒலிக்குறைவை நிறைவு செய்வதற்கெனப் புதிய வரிவடிவங்களை உருவாக்க வேண்டிய அவசியம் எதுவும் எழவில்லை. இன்னும் சொல்லப் போனால், பயன் குறைந்த வரிவடிவங்களை விடுத்துப் பயன்மிகு எழுத்துருக்களைப் பயன்படுத்த முற்படுவதே அறிவுடைமையாகும்.'' உலகெங்கும் பிறமொழிக் கலப்பைப் பல்வேறு காரணங்களுக்காக வெறுக்கும் தூய மொழி இயக்கங்கள் இருந்தே வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தமிழில் க, ச, ட, த, ப என ஐந்து வல்லின எழுத்துக்கள் உண்டு. இவைகள் தவிர இந்தி, சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் ஹகாரம் சேர்ந்த அழுத்த உச்சரிப்பு ஒன்றும், கண்டத் துவனியுடன் ஆன உச்சரிப்பு ஒன்றும், அதற்கு ஹகாரம் சேர்ந்த உச்சரிப்பு ஒன்றும் ஆக மூன்று மாறுதல்கள் இருப்பது போல் தமிழ் எழுத்துகளில் இல்லை. ஆனால் பேசும்போதும், படிக்கும் போதும் பலவித ஒலிகளைப் பயன்படுத்துகிறோம். உதாரணமாக 'க' என்ற எழுத்து 'கடுகு', 'பக்கம்', தங்கம், 'அகம்', 'குகன்' என்ற பதங்களில் எப்படி உச்சரிக்கப்படுகின்றது என்பதைக் கவனித்தால் ஒலி மாறுபாடுகள் புலனாகும். இவ்வேறுபாட்டுண்மையைத் தமிழ் இலக்கணங்கள் கூறும். 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம்' என்பது பழமொழி. ஆங்கிலத்திலும் முதல் எழுத்து 'A'. அது பல ஒலிகளைக் கொண்டுள்ளது. 'ழ' என்ற தமிழ் எழுத்தின் ஒலி பிற மொழிகளில் கிடையாது. ஆங்கிலத்தில் அதை 'zha' என்று எழுதுகிறார்கள். தமிழ் எழுத்துகளை எப்படி வேறுபட்ட முறையில் ஒலிக்க வேண்டுமென்பதைப் பற்றித் தொல்காப்பிய நூலினாலும், நடைமுறையில் பயன்படுத்தும் முறையினாலும் நன்கு அறியலாம்.

இந்த ஒலிக் குறையினை நீக்கப் பன்னெடுங் காலமாகக் கிரந்த எழுத்துகளான ஸ, ஷ, ஜ, க்ஷ, ஹ, ஸ்ரீ ஆகிய ஆறு எழுத்துகளும் தமிழில் பயன்பட்டு வருகின்றன. இவை போன்ற ஒலிகள் கூடத் தேவையில்லை என்பது தூயமொழி இயக்கத்தினர் கருத்து. 'ஸ்ரீ' என்பதற்குத் 'திரு' என்று தமிழில் எளிமையாக எழுதலாம். "அறிவியலைப் பொறுத்த வரை மூலச் சொல்லின் ஒலிக்குறிப்பை முழுமையாகப் பெறும் பொருட்டுக் கிரந்த வரி வடிவங்களைத் துணைக் கொண்டு பொருட்பெயர்கள், இடப்பெயர்கள், பெயர்ச் சொற்கள், அலகுகள் ஆகியவற்றை ஒலி பெயர்ப்பதன் மூலமே கருதிய பயனைப் பெற முடியும் என்பது மணவை முஸ்தபாவின் கருத்து.

ஆங்கில மொழி வளர்ச்சிக்கு அயல் மொழிகளிலிருந்து அளவுக்கதிகமாக மேற்கொள்ளப்பட்ட பிறமொழிச் சொற் கலப்பே காரணம் என்பது ஒரு கருத்து. ஆங்கில மக்கள் உலகத்துப் பெரும்பாலான மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் பெற்று, அவற்றின் மூலம் ஆங்கிலத்தின் கருத்து வளத்தை இணையற்றதாக்கியிருக்கின்றனர். இஞ்ஞான்று ஆங்கிலத்தில் உணர்த்தமுடியாத கருத்து எந்தத் துறையிலும் இல்லையென்ற சிறப்பு ஏற்பட்டுவிட்டது. சில தமிழ்ச் சொற்கள் நேரிடையாகவும் சில மாற்றங்களுடனும் ஆங்கிலத்தில் கலந்தன. உதாரணமாக, கீழ்க்காணும் சொற்களைக் காணலாம். கட்டுமரம் Catamaran, கயிறு Coir, கறி Curry, காசு Cash, கூலி Coolie, தோப்பு Tope, பறையர் Pariah, பூசை Puja, மாங்காய் Mango, இவை சுருக்க ஆக்சுபோர்டு ஆங்கில அகராதியில் உள்ளன. Pariah 'கீழ்பட்ட ஜாதியைச் சேர்ந்தவன்' என்றும் 'இந்தியச் சொல்' என்றும் அதில் விளக்கப்பட்டிருக்கிறது.

'பறையர்' என்பது இழிவான முறையில் கருதப்பட வில்லை என்று பாரதியார் "நாற்குலம்" எனும் சமூகக் கட்டுரையில் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்: "பறையர்" என்பது மரியாதை உள்ள பதம் இல்லை என்று கருதி இக்காலத்தில் சிலர் 'பஞ்சமர்' என்ற சொல்லை

அதிகமாக வழங்குகிறார்கள். நானும் சில சமயங்களில் 'பஞ்சமர்' என்ற சொல்லை வழங்குவது உண்டு. ஆனால் பறையர் என்பதே மேற்படி ஜாதியாருக்குத் தமிழ் நாட்டில் இயற்கையாக ஏற்பட்ட பெயர். 'பறை' என்பது பேரிகை. பூர்வ காலத்தில் நமது ராஜாக்கள் போர் செய்யப் போகும் போது ஜய பேரிகை கொட்டிச் செல்லும் உத்தமமான தொழில், இந்த ஜாதியர் செய்து வந்தபடியால் இவர்களுக்கு இப்பெயர் வழங்குவதாயிற்று.'' காந்தியடிகள் தீண்டாமையை ஒழிக்கப் 'பஞ்சமர்' என்பதற்குப் பதிலாக 'அரிஜன்' என்ற பதத்தைப் பயன்படுத்தினார். ஆனால், அவர் முயற்சியால் தீண்டாமை ஒழியவில்லை.

1867-ஆம் ஆண்டில் பிரட் ஆர்ட் என்றவர் 'ஒரு பையனின் நாய்' என்ற ஆங்கிலக் கட்டுரையில் 'அது ஒரு பறைய நாய்' என்று வருணித்திருக்கிறார். He is very Pariah and outcaste ; in brief 'A Boy's dog' இவ்வித அயல்மொழிக் கலப்பு எல்லா மொழிகளிலும் உண்டு. உதாரணமாகத் தமிழில் ஜப்தி, அமீன் முதலியவை இந்துஸ்தானியிலிருந்தும், கிஸ்தி, ஜமீன், கஸ்பா முதலியவை பெர்சியன் அல்லது அரபிக் மொழிகளிலிருந்தும், மேஸ்திரி, மேஜை, பாதிரி, சாவி, ஜன்னல் முதலியவை போர்ச்சுகீஸ் மொழியிலிருந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பிறமொழிக் கலப்பை வெறுக்கும் தூயமொழி இயக்கங்கள் உலகெங்கும் இருந்து வருகின்றன. 1918-ஆம் ஆண்டில் தூய ஆங்கில மொழி இயக்கத்தைத் தோற்றுவித்து அம்மொழியை வளர்த்து வருகிறார்கள். அதனால் 'தனித்தமிழ் இயக்கம்' தமிழ் மேம்பாட்டைப் பாதுகாக்கத் தோற்றுவித்ததில் வியப்பு ஒன்றுமில்லை. பிறமொழிக் கலப்பினால் ஒருமொழி தன்மொழிச் சொற்களைப் படைத்து வழங்கும் தன்மையை இழக்க நேரிடும். தமிழில் உள்ள வேர்ச்சொற்கள் மூலம் எண்ணற்ற புதுச் சொற்களை

உருவாக்கலாம். 'யுனஸ்கோ கூரியர்' ஆசிரியர் மணவை முஸ்தபா ஆங்கில-தமிழ் கலைச்சொற் களஞ்சியம் இயற்றும் பணியில் 'முடுக்கம்' என்ற பதத்தைப் பயன்படுத்தி அகர முறை வரிசையில் அமைந்த கலைச் சொற்களுக்கு அநேகப் பதங்கள் வகுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ் அகராதி

ஒரு மொழியிலுள்ள சொற்களை அகர வரிசையில் நிறுத்தி அவற்றுக்குப் பொருள் கூறும் நூல், அகராதி எனப் படும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் 'உரியியல்' என ஒரு பிரிவு உள்ளது. அதில் 120 உரிச்சொற்களின் பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. இதுவே ஒரு வகைச் சிறிய அகராதி போன்றது. இது பின் தோன்றிய நிகண்டுகளுக்கு வழி காட்டியாக அமைந்துள்ளது. அகர வரிசையில் உரை நடையில் அமைந்த அகராதிகள் சென்ற நூற்றாண்டில் தோன்றின. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி 1913-ஆம் ஆண்டுத்தொடங்கப் பெற்று, 1936-ஆம் ஆண்டில் முற்றுப்பெற்றது. இது மிகவும் சிறப்பான, பல சீர்திருத்தங் களைக் கொண்ட அகராதி. இதன் முன்னுரையில் தமிழ் அகராதிகளின் சரித்திரம் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக் கிறது, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித் துறை, 'தமிழாய்வு' என்னும் நூலை ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலராக வெளியிட்டது. அதில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் திரு. மு. சண்முகம் பிள்ளை "தமிழில் அகராதிக் கலையின் வளர்ச்சி வரலாறு" என்ற விரிவான கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் பிற்காலத்தில் வந்த 'ஆனந்த விகடன் அகராதி' (1935), 'மதுரைத் தமிழ்ப் பேரகராதி (1937), ஆட்சிச் சொல் அகராதி, சட்டச் சொல் அகராதி முதலியவைகளைக் குறிப்பிட்டு இருக்கிறார். சென்னைப் பல்கலைக் கழக அகராதியில் விட்டுப்போன 13,357 சொற்களும் 423 பக்கங்களில் அனுபந்த அகராதியாக

1936–38 ஆம் ஆண்டுகளில் மூன்று பகுதிகளாக அமைத்துத் தரப்பட்டுள்ளன. இந்தத் தமிழ்ப் பேரகராதி வந்து 55 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. இக்கால கட்டத்தில் வெளிவந்துள்ள புதிய நூல்களும் பலவாகும். தமிழ் மொழி பல்வேறு துறைகளில் வேகமாக வளர்ந்து வருகிறது. மேலும் விரிவும், திருத்தமும், விளக்கமும் பெறும் நிலையில் இந்த அகராதியைத் திருத்தி வெளியிட வேண்டும். ஐந்து அல்லது பத்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது திருத்தங்களுடன் அகராதியின் பதிப்புகள் வெளியிட, ஒரு நிரந்தரக் குழு அமைக்கலாம். மேலைநாடுகளில் அகராதிகள் எவ்வாறு வளர் கின்றன என்பது நமக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகம் 1963 – 1965 ஆம் ஆண்டு களில் மூன்று பகுதிகளாக வெளியிட்ட ஆங்கில – தமிழ் அகராதியும் சிறப்பான ஒரு தொகுப்பாகும். சுருக்க ஆக்சு போர்டு ஆங்கில அகராதியின் அமைப்பின் அடிப்படையில் அஃது உருவாக்கப்பட்டுள்ளது. கருத்து வேறுபாடுகளும், குறைகளும் எந்த அகராதியிலும் காணலாம். உதாரணத் திற்கு Rubber என்ற பதத்திற்குத் 'துடைப்பான்' என்று அகராதியில் பொருள் கூறப்பட்டிருக்கிறது. திரு. கி. இராமலிங்கனார், Rubber என்னும் சொல்லுக்குத் 'தேய்ப்பம்' என்னும் தமிழ் ஈடாகும் என்கிறார். துடைப்ப தற்குப் பயன்படுத்தும் கருவியைத் துடைப்பம் என்கிறோம். அப்படியே தேய்ப்பதற்குப் பயன்படுத்தும் பொருளைத் தேய்ப்பம் என்பதில் என்ன குறை? இப்பொருள் சக்கரங் களிலோ, பிற இடங்களிலோ அமைந்தாலும், தேய்வு பெறுவதையே அறிவோம். எனவே Rubber என்பதற்கு எல்லாவிடங்களுக்கும் பொருத்தமான தமிழ்ச் சொல்லாகத் தேய்ப்பம் அமைகிறது என்பது திரு. கி இராமலிங்கனார் கருத்து. Tyre என்ற பதத்திற்கு ஆங்கில – தமிழ் அகராதியில் 'ரப்பர் டயர்' என்று பொருள் கொடுக்கப்

பட்டிருக்கிறது. திரு. கி. இராமலிங்கனாரின் கருத்து Tyre எனும் சொல்லுக்குப் பொருந்தாது. ஒவ்வொரு மொழியிலும் ஒரு சிறப்புண்டு. பஞ்ச தந்திரத்தை ஆங்கிலத்தில் ஆக்கம் செய்த A. W. Rydar கூறுவதாவது, "நீதி என்னுஞ் சொல் உத்தேசமாக, "சான்றாண்மை சிவணிய வாழ்வு நெறி"யைக் குறிக்கும். ஆங்கிலத்திலோ, இச்சொல்லுக்குச் சரியான இணைச் சொல் இல்லாது இருப்பதைக் கண்டு மேலை நாகரிகம் ஓரளவு வெட்கப்படும் நிலையில் உள்ளது. இவ்வொரு சொல்லை விளக்கப் பல சொற்கள் வேண்டப்படுகின்றன. என்றாலும் இச்சொல் சுட்டும் கருத்தை உணர்ந்துவிட்டால், இதைப் பற்றித் தெளிவும், வலுவும், நிறைவும் பெற முடியும்" ("The word *niti* means roughly "the wise conduct of life". Western civilization must endure a certain shame in realizing that no precise equivalent of the term is found in English, French, Latin or Greek. Many words are therefore necessary to explain what *niti* is, though the idea, once grasped, is clear, important and satisfying.)"

**கலைச் சொல்லாக்கம்**

மணவை முஸ்தபா இயற்றிய 'காலம் தேடும் தமிழ்' என்ற நூலில் 'கலைச் சொல்லாக்கம்' எனும் பகுதியில் அந்தத் தலைப்பின் வரலாற்றையும், அதில் எழும் பிரச்சினை களையும், எப்படித் தீர்வு காணப்படுகிறதென்பதையும் விரிவாகவும், தெளிவாகவும் கூறியிருக்கிறார். "கலைச் சொல்லாக்கப் பணிகளில் ஓரளவு விரைவு பெற்றதில் அறிவியல் இதழ் வெளியீடுகளும், புத்தக நிறுவனங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன" என்பதைத் தக்கச் சான்று களுடன் விளக்கியிருக்கிறார். இதில் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள கலைக்களஞ்சியம் பத்துத் தொகுதி களும், குழந்தைக் கலைக் களஞ்சியம் பத்துத் தொகுதி

களும், தென் மொழிப் புத்தக நிறுவனமும், கலைக்கதிர், யுனெஸ்கோ கூரியர் திங்களிதழ்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவைகள் புதிய கலைச் சொற்களை உருவாக்கியிருக்கின்றன. தமிழ் உட்பட 34 உலக மொழி களில் வெளிவரும் அறிவியல் கட்டுரைகளை உடனுக்குடன் மொழிபெயர்த்து ''யுனெஸ்கோ கூரியர்'' என்ற திங்களேட்டில் வெளியிடுகின்றனர். இவ்வகையில் கடந்த இருபது ஆண்டுகளில் சுமார் ஐம்பதினாயிரம் கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கலைச் சொற்கள் அனைத்தையும் தொகுத்துச் சொற்பொருள் விளக்கங் களுடன் ''அறிவியல்தமிழ்க் கலைச்சொற்களஞ்சியம்'' (Encyclopaedia Tamil Dictionary) என்ற பெயரில் திரு. மணவை முஸ்தபா வெளியிட்டுள்ளார். இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ப வெளியிட்ட கலைக் களஞ்சியங் களைச் சில ஆண்டுகளுக்கொருமுறையாவது சிறப்பாகப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபடவேண்டும். இவ்வித முயற்சி களின் பயனாகப் பிரிட்டானியா கலைக் களஞ்சியத்திற்கு (Encyclopaedia Brittania) உள்ள உலக மதிப்பைத் தமிழ்க் களஞ்சியங்களும் பெறலாம்.

'தமிழ்ச் சொற்சிறப்பு' என்ற கட்டுரையில் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ''தமிழ், வளம் பெற்ற ஒரு மொழி, அதன் சொற்சிறப்பு, ஒரு தனிச் சிறப்பு. ''அஃது என் தாய்மொழி என்பதற்காக நான் பெருமை யடைகிறேன்'' என்று கூற ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமையுண்டு'' என்பதைப் பின்வருமாறு விளக்கியிருக் கிறார் :

''தமிழில் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் என்றும், ஒரு பொருள் குறிக்கும் பல சொல் என்றும் உண்டு. ''மா'' என்பது ஒரு சொல். அது பல பொருள்களைக் குறிக்கும் அவை அழகு, அளவு, அறிவு, ஆவி, இடித்த மா, இடைக்

கட்டு, கறுப்பு, ஒரு மரம், குதிரை, சீலை, செல்வம், தாய், நஞ்சுக் கொடி, நிறம், பறி, பெருமை, மேன்மை, வண்டு, வயல், வலி, விலங்கு முதலியன.

அடுத்து ஒரு பொருள் குறிக்கும் பல சொல்லாவன : வேழம், களிறு, கரி, கைமா, நடைமலை, கைமலை, கறையடி, ஒருத்தல், அறுகு, ஆம்பல் நந்தி, தும்பி, தூங்கல் என்ற இவை அனைத்தும் 'யானை' என்ற ஒன்றையே குறிப்பன. இவை தமிழின் சொல் வளத்தைக் காட்டு வனவாம்''. இந்தக் கருத்து எல்லாப் பொது இலக்கியத் திற்கும் பொருந்தும்.

இதைப் பல மொழிகளிலும் காணலாம். ஆங்கிலத்தில் Thesaures '' பொருளியைபுச் சொற்களஞ்சியம் '' இதை விளக்கும். Synonym என்பது ஒரு பொருட் பன்மொழி. Antonym என்பது எதிர் பொருட் சொல்.

''சொற் கோவை விரிவாக்கம் மேலும் செம்மையுறுவ தற்குப் பல பொருள் ஒரு சொல்லாட்சியும், ஒரு பொருள் பல சொல்லாட்சியும் தவிர்க்கப்படுதல் வேண்டும்'' என்று இந்த மார்ச்சு 1989 இறுதியில் நடந்த 'தமிழ் மேம்பாட்டுத் திட்டம்' கலந்தாய்வரங்கத்தில், 'தமிழ் புதுமை மயப் படுத்தம்' என்ற தலைப்பில் டாக்டர் இ. மறைமலை கூறிய கருத்து அறிவியல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியம்.

## மொழி பெயர்ப்பு

மணவை முஸ்தபா இயற்றிய 'காலம் தேடும் தமிழ்' என்ற நூலில் ''சுவையற்ற அறிவியல் செய்திகளைச் சுவை யாகச் சொல்லக் கருதிப் பல பொருள் தரும் இலக்கிய நயமான சொற்களைப் பயன்படுத்தினால் அறிவியல் மூல நூலாசிரியரின் கருத்திலே சிதைவும் பொருளிலே மாற்றமும் ஏற்பட்டுவிட வாய்ப்பும் தவறான பொருள் விளக்கம்தர

வழியும் உண்டாகும். பொருள் மயக்கத்திற்குக் கடுகளவும் இடம் தராது, உள்ளது உள்ளபடியே பெயர்த்தல் வேண்டும்" என்பதை வலியுறுத்தியிருக்கிறார்.

அறிவியல் சொல் அகராதிகளில் பல பொருள் ஒரு சொல்லாட்சியும், ஒரு பொருட் பல சொல்லாட்சியும் தவிர்க்கப்படுதல் வேண்டும். டாக்டர் இ. மறைமலை (சென்னை மாநிலக் கல்லூரி), இக்கருத்தைப் பின்வருமாறு சென்ற மார்ச்சு மாதம் நடந்த தமிழ் மேம்பாட்டுத் திட்டம்-கலந்தாய்வரங்கில் 'தமிழ் புதுமை மயப்படுத்தம்' என்ற தலைப்பில் விளக்கியிருக்கிறார்: "நுண்ணிய பொருள் மாறுபாடுகளை உடைய பல்வேறு ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு ஈடாகத் தமிழில் ஒரே கலைச் சொல் மட்டுமே வழங்கி வருவது குழப்பத்தையும் பொருள் மயக்கத்தையும் ஏற்படுத்துகிறது".

மாறுபட்ட பொருள்களையுடைய ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு ஈடாக – அம்மாறுபாடு நுண்மையாக இருப்பினும் – வெவ்வேறு தமிழ்ச் சொற்களை உருவாக்கியளிக்கும் முயற்சியும் முனைப்பும் தேவை. திட்டம், நுட்பம், தெளிவு இவை கூடிய சொற்களால்தான் அறிவியல் கருத்துகளை உணர்ந்து ஆங்கில அறிவியல் நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க முடியும்.

ஒரு சொல் பல பொருளைக் குறிக்கும் பொழுது அதை எந்தப் பொருளில் ஒருவர் உபயோகப்படுத்துகிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும். நான் மாநில முதன்மை நீதிபதியாக இருந்த சமயத்தில் பெரியார் மனைவி திருமதி. மணியம்மையார் பதிப்பாசிரியையாக இருந்து வெளியிட்ட விடுதலைப் பத்திரிகையில் 'போர்' என்ற ஒரு கட்டுரையில் கண்ட "சென்னையில் வசிக்கும் வடநாட்டினரை வன்முறையில் விரட்ட வேண்டும் என்பது 'இனத் துவேஷம்'

தூண்டுமா ?" என்ற ஒரு சிறு குற்ற வழக்கை விசாரணை செய்தேன். திருமதி. மணியம்மையாருக்கும், கட்டுரை ஆசிரியருக்கும், மறைந்த டாக்டர் மு. வரதராசனார், (தமிழ்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்), சாட்சியாக வந்து கட்டுரையில் 'போர்' என்ற சொல் அறப்போரைக் குறிக்கும் என்றார். 'போர்' என்பது பல பொருள் கொண்ட ஒரு சொல்; சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதியில் போர் என்ற சொல்லுக்குச் சண்டை, வைக்கோல்போர், என்றெல்லாம் பொருள் கூறப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, "'போர்' என்ற கட்டுரை வன்முறையைத் தூண்டுகிறதா அல்லவா" என்று வினவினேன். அவர் அதற்குப் பதிலளிக்காமல் மௌனமா யிருந்தார். 'போர்' எனும் சொல் 'சண்டை' என்ற வன்முறைப் பொருளைக் குறிக்கும் என்று கருதி, குற்றம் மெய்ப்பிக்கப்பட்டதால் ஒவ்வொரு குற்றவாளிக்கும் நூறு ரூபாய் தண்டனை விதித்தேன்.

**சிறார்களுக்குப் புதிய நூல்கள்**

நம் சிறார்களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே படிக்கும் பழக்கத்தை வளர்க்க வழிவகை தேடவேண்டும். ஆண்டு முழுதும் பள்ளிப் பாடப்புத்தகங்களையே பார்த்தும் படித்தும் அலுத்துப் போன குழந்தைகளுக்குப் புதுப்புதுப் புத்தகங்களை மேல் நாட்டுப் புத்தகங்களைப் போல் கண்ணைக் கவரும் வண்ணப்படங்களுடன் வெளியிட வேண்டும். நல்ல தாள், கனத்த அட்டை, பெரிய எழுத்து முதலிய யாவும் இன்றியமையாதவை. ஒரே புத்தகத்தைப் பல இந்திய மொழிகளில் வெளியிடும் முறையைக் கையாண் டால் படங்கள் போடுவதில் ஏற்படும் செலவு குறையும். எளிய விலையில் சிறந்த சிறுவர்கள் புத்தகங்களை வெளியிட லாம். சிறுவர்களுக்காகப் பல மொழிகளில் வெளியிடப்படும் 'அம்புலிமாமா' என்ற மாத வெளியீடு இக்கருத்துக்கு ஒரு

வழிகாட்டியாக அமையும். நான் சிறுவனாய் இருந்த பொழுது, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலக நீதி முதலிய செய்யுட்களை எனக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். அப்பொழுது அச்செய்யுள்களின் பொருள் புரியாவிடினும், மனனம் செய்யும் முறையால் அறிவு வளர வளர, அச்செய் யுட்களின் உட்பொருள் அறிய வாய்ப்புக் கிடைத்தது. பாரதியார் பாடல்கள் பல குழந்தைகளுக்குச் சிறந்த இலக் கியம். பிறமொழியில் சிறந்து விளங்கும் குழந்தை நூல் களைத் தமிழ் மொழியில் பெயர்த்துத் தருவது ஒரு நற்பணி யாகும். மொழி பெயர்க்கும்பொழுது குழத்தைகளுக்கு ஏற்ற வகையில் செய்யவேண்டும். ஹான்ஸ் கிறிஸ்டியன், ஆண்டர்சன் குழந்தைகளுக்குச் சொன்ன கதைகள், லுயிகரல் இயற்றிய 'அதிசய உலகில் ஆலிஸ்' (Alice in Wonderland) முதலியவை உலகப் பிரசித்தி பெற்ற குழந்தை இலக்கியங்கள்.

'பினோஷியா' என்னும் உலகப் பிரசித்தி பெற்ற மரப் பாவைக் கதை 1883-ஆம் ஆண்டில் கல்லோடி என்ற புனை பெயர் கொண்ட இத்தாலியரால் எழுதப்பட்டு, 200 உலக மொழிகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதைப் பத்தாண்டு களுக்கு முன் வழக்கறிஞர் ஜி. இராமசுப்பிரமணி அய்யர் தமிழில் மொழிபெயர்த்துத் தம் செலவில் வெளியிட்டார். முதலில் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக இந்நூலை வெளியிடலாமென்று கருதி, அகிலன், மாயாவி முதலியவர்களுக்கு எழுதினார். மாயாவியிடமிருந்து வந்த பதில் "அவர்கள் எல்லாம் தமிழ் வளர்க்கப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொள்வதைத் தவிர உண்மையில் வியாபார நோக்குடையவர்கள்" என்பது. அகிலன் எழுதிய பதில் "அந்தக் கூட்டுறவு சங்கம் அச்சம் தெரிவிக்கிறார்கள்" என்பது. அதனால் அந்தப் புத்தகத்தின் கையால் எழுதிய பிரதியைத் தேசிய புத்தக நிறுவனத்திற்கு (National Book Trust) அனுப்பினார். அவர்கள் "தங்கள் புத்தகப் பொறுப்பு அமைப்பில் வரவில்லை" என்று

திருப்பி அனுப்பி விட்டார்கள். திரு அழ. வள்ளியப்பா 1959 ஆம் ஆண்டு முதலாவது இலக்கிய மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். பதினேழு ஆண்டுகளாகக் குழந்தை இலக்கியத் துறையில் ஈடுபட்டு, தாம் பெற்ற அனுப வத்தைத் தலைமை உரையில் கூறினார். அவர் 1942-ஆம் ஆண்டு முதல் குழந்தை இலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டு பாராட்டத்தக்கது. அவர் விருப்பப்படி நான் 1961–ஆம் ஆண்டு குழந்தைகளின் தினத்தன்று குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் விழாவில் கலந்து கொண்டு, 33 ஆசிரியர்கள் எழுதி, 17 பதிப்பாளர்கள் தயாரித்த, 68 குழந்தைப் புத்தகங்களை வெளியிட்டு, சங்கத்தின் அரும்பணிகளைப் பாராட்டினேன். மணவை முஸ்தபா இயற்றிய 'காலம் தேடும் தமிழ்' என்ற நூல் வாயிலாகச் சிறுவர் அறிவியல் இலக்கிய வளர்ச்சியைப் புரிந்து கொள்ளலாம். இதுவரை எழுதப்பட்டு வெளி வந்துள்ள சிறுவர் இலக்கியங்கள் சுமார் 2500 ஆகும். இவற்றில் 400 நூல்கள் அறிவியல் செய்தி களைக் கூறும் படைப்புகளாகும். 1957-ல் சென்னையில் தமிழ்க் குழந்தைப் புத்தகங்களைப்பற்றி டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள் தலைமையில் ஒரு மதிப்பீடு (Survey) எடுக்கப் பெற்றது. பார்வையிடப்பட்ட 263 புத்தகங்களில் 3 முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இரண்டே இரண்டு புத்தகங்கள்தாம் இருந்தன. மேல் நாடுகளில் குழந்தைகளின் இலக்கியத்தை ''எந்த வயது முதல் எந்த வயது வரை பயன்படுத்தலாம்'' என்று வகுத்திருக் கிறார்கள். இந்த முறையைக் கையாண்டால், குழந்தைகள் தம் வயதுக்கேற்ற புத்தகங்களைப் படிக்கப் பயன்படும். அவர்களுக்கு அறிவியல் சம்பந்தமான பல நூல்கள் இன்று மிகவும் தேவையாயுள்ளன.

கல்வித்துறை ஒரு வியாபாரத் தொழிலாக அமைவது வேதனைக்குரிய செய்தி. மழலைப்பள்ளி முதல் மருத்துவ, பொறியியல், சட்டக் கல்லூரிகளெல்லாம் தனியார் நடத்து

வதில் வியாபார நோக்கே முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. மழலையர் பள்ளியில் ஆங்கிலத்தில்தான் கல்வி கற்பிக்கப்படு கிறது. அந்தப் பள்ளிகளில் தாம் மூன்று வயதுக் குழந்தை களைச் சேர்க்கப் பொதுமக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆனால் மழலையர் பள்ளியை நடத்துபவர்கள் மூன்று வயதுக் குழந்தைகளுக்கு நுழைவுத்தேர்வு வைக்கின்றனர்; படங் களைக் காண்பித்து ஆங்கில வார்த்தையில் படம் குறிப்பிடும் பொருளைக் கேட்கின்றனர்; சரியாகச் சொல்பவர்களில் வேண்டுமளவு ஏற்றுக்கொள்கிறார்கள். பள்ளிக்கூடங்களிலும் ஆங்கில வகுப்புகள் குறைவு; ஆனால் அதில் சேர்வதற்குப் போட்டி அதிகம். இந்நிலை 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்றகோட்பாடு நடைமுறையில்வருவதற்குத் தடங்கலுண்டு பண்ணும். தென்னிந்தியப் பொது மக்களிடம் தாய் மொழிப் பற்று இருப்பினும், ஆங்கிலம் கற்பதை மிகவும் விரும்பு கிறார்கள். உலக மொழியான ஆங்கிலத்தைக் கற்க வேண்டு வது அவசியம் தான். ஆனால் குழந்தைப் பருவத்தில், தமிழிலேயே பேசவும், படிக்கவும், எழுதவும் கற்க வேண்டும். ஆங்கிலத்தை நான்காவது, ஐந்தாவது வகுப்புகளிலிருந்து கற்க ஆரம்பிப்பது மிகவும் பொருத்தம்.

**வளரும் தமிழ் நூல்கள்**

இன்று தமிழ்மொழி பலதுறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருகிறது. அரசியல் விடுதலையும் விஞ்ஞான முன்னேற்றமும் தமிழின் வளர்ச்சியை விரைவுபடுத்தி உள்ளன. தமிழ்மொழி பரவலாகப் பொதுமக்களுக்குப் பணிபுரியும் வகையில் பல சாதனங்களிருக்கின்றன. நாளிதழ்களும்,வார,மாத,மும்மாத, ஆண்டு பருவஇதழ்களும் தமிழ்மொழி வளர முக்கிய சாத னங்கள். சிறுகதைகளும், கட்டுரைகளும், தொடர் கதைகளும் இவைகளில் இடம் பெறுகின்றன. ஆங்கிலத்தில் வரும் நாளி தழ்களையும் தமிழில் வரும் நாளிதழ்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இலக்கிய, அறிவியல் கட்டுரைகளின் எண்ணிக்கை

யிலும், தரத்திலும் தமிழ் ஏடுகள் எவ்வளவு பின் தங்கி இருக்கின்றன என்பது நன்கு புலனாகும். நடிகைகளின் கவர்ச்சிப் படங்களும், நடிகர், நடிகைகள் பேட்டியும் திரைப்படச் செய்திகளும்தாம் தமிழ் நாளிதழ்களில் அதிக அளவு இடம் பெறுகின்றன தமிழ் நாளிதழ்களில் ஆங்கிலச் சொற்களும், இதர மொழிச் சொற்களும் பயன்படுத்துவதைத் தவிர்த்து, அதற்கு ஈடான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற கருத்தைச் சில அறிஞர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், நாளிதழ்களுக்கும், பருவ இதழ்களுக்கும் சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன. அன்றாடம் நடைபெறும் அரசியல், சமூக நிகழ்ச்சிகள், புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் முதலாய செய்திகளும் நாளிதழ்களில் இடம் பெறுகின்றன. கால நெருக்கத்தால் செய்திகளை எழுதவும் மொழி பெயர்க்கவும் ஏற்படும் நிலையில் தமிழ் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, இலக்கியத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபடுவது மிகவும் கடினம். தமிழ் மொழி வளர்ச்சியை இலக்கிய நோக்கில் பருவ இதழ்களின் மூலம்தான் எதிர்பார்க்க இயலும். எனினும் எழுத்துத் தமிழின் வளர்ச்சியைச் சீரமைப்பது வரவேற்கத் தக்கதே. இந்த ஆண்டுத் தினத்தந்திப் புத்தாண்டு மலரில் திரைப்பட இயக்குநர் எஸ். பி. முத்துராமன் எழுதிய 'சிக்கல் நிறைந்த சினிமா' என்ற சிறந்த, பயனுள்ள கட்டுரையில் காணும் பின்வரும் பகுதி இக் கருத்துகளை ஆராய்தற்குப் பயன்படும்:

"கதை, வசனம் எழுத, பாடல்கள் அமைக்க என்ப் பலரும் வருகிறார்கள். அவர்களில் பலருக்குத் தமிழே எழுதத் தெரியவில்லை. முதலில் தமிழ் எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும். அதன் பிறகு பத்திரிகைகளில்

எழுதித் தங்களை எழுத்தாளராக, அதுவும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் எழுத்தாளராக ஆக்கிக்கொள்ள வேண்டும். அதன் பிறகு சினிமாத் துறைக்கு வந்தால் ஒரு அறிமுகம் கிடைக்கும்.

பல லட்சங்களைப் போட்டுப் படம் எடுக்கும் தொழிலுக்கு உங்கள் எழுத்துகளே அஸ்திவாரம். அஸ்திவாரம் பலமாக இருக்க உங்கள் எழுத்துகள் உறுதியாக இருக்க வேண்டாமா? பணிகளைச் செய்து கொண்டே எழுத்தாற்றலை முறையாக வளர்த்துக் கொள்ளுங்கள். டாக்டர் ஆக எம். பி., பி. எஸ், படிக்க வேண்டும். வக்கீல் ஆக பி. ஏ., பி. எல் படிக்க வேண்டும் என்பதைப் போல நீங்கள் எழுத்தாளன் என்ற பட்டத்துடன் வரவேண்டும். அப்போதுதான் மரியாதை கிடைக்கும்.

இதைப் போலவே மற்றத் தொழில்களும். உதாரணத்திற்கு உதவி டைரக்டர்கள், உதவி ஒளிப் பதிவாளர்கள், உதவி எடிட்டர்கள், உதவி ஒலிப் பதிவாளர்கள் என்று ஆயிரக் கணக்கில் ஆண்டுகள் பலவாக உழைக்கிறார்கள்.''

**பேச்சுத் தமிழ், வட்டாரத் தமிழ், மேடைத் தமிழ்**

பேச்சுத் தமிழிலும், எழுத்துத் தமிழைப் போல் பல வகைகள் உள்ளன. அன்றாட வாழ்வில் வீடுகளிலும், பொது இடங்களிலும் அனைவரும் தாய்மொழியைப் பயன் படுத்துகிறார்கள். தமிழ்மொழியை மேம்படுத்த விரும்பி னால், தமிழ் மக்கள் ஆங்கிலத்தில் சிந்திப்பதையும், பேசுவதையும் தொழிலில் உபயோகப்படுத்த வேண்டிய நிலையையும் தவிர, வீட்டிலும், நண்பர்களிடமும், பொது இடங்களிலும் தமிழ் மொழியிலேயே பேசவேண்டும் என்று

பாரதியார் 'தமிழின்நிலை' என்ற கட்டுரையில் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். பல்வேறு இடங்களில் மக்கள் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து பேசும்பேச்சு வழக்கு மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடுகிறது. திரு கி. இராமலிங்கனார், இராசபாளையம் போகும் வழியில் காய்ந்த வயலில் சுமார் நூறடி நீளமும், நான்கடி உயரமுமுள்ள, நிலத்திலிருந்து ஓரடி தூக்கிப் போடப்பெற்ற கதவில்லாத கொட்டகைகளைக் கண்டார். அவை யாவை எனப் புரியாமல் அப்பக்கத்தில் இருந்த ஒருவரைக் கேட்டார். அவர் இவை 'பண்டடை' என்றார். பிறகு விளக்கம்கேட்டு வெங்காயத்தைப் பண்டம் கெடாமல் அடைத்து வைப்பதற்காகச் செய்யும் முறை என்று புரிந்துக்கொண்டார். அவருக்கு Ware Housing Corporation என்பதற்குப் 'பண்டடை நிறுவனம்' என்ற தமிச் சொல்லை அமைக்கலாம் என்று தோன்றிற்று.

இந்தப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் தந்தையார் டாக்டர் வா. சண்முகசுந்தரம் பிள்ளை, கால்நடை மருத்துவராகத் திருநெல்வேலியில் பணிபுரியும் போது ஒரு குடியானவன், தன் மாட்டைக்கொண்டுவந்து 'மாடு 'எருகுது' என்றான். அவருக்கு 'எருகுது' என்ற சொல்லுக்குப்பொருள் புரியவில்லை. அப்பொழுது அந்தமாடு கட்டியாகச் சாணம் போடாமல் நீராகக்கழிந்தது. உடனே குடியானவன் "ஐயா, மாடு 'எருகுது' பாருங்கள்" என்றான். 'எருகுதுதல்' என்பது அந்த வட்டாரச்சொல். இவ்வித வட்டாரச்சொற்கள் மொழி வளர்ச்சிக்குப் பயன்படுகின்றன என்ற கருத்தை 15-4-'89 ல் வெளியான ஆங்கில மருத்துவ இதழில் (B. M. J.) காணலாம்.

பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் வகுப்பது இயலாது. மேடைத் தமிழ் ஒரு தனிக்கலை. சொற்பொழிவாளர்கள் பலதரப்பட்டவர்கள். கொச்சைத் தமிழில் பேசுவோருளர்.

இனிய தூயதமிழில் பேசி மக்களைக் கவரும் பல பேச்சாளர்கள், தமிழ் வளர்ச்சிக்குச் சிறந்த தொண்டாற்றியிருக்கிறார்கள். இதற்கு நூல் வடிவாக வந்த ஞானியாரடிகளின் சமயச் சொற்பொழிவுகளையும், திரு வி. க. வின் சமூகச் சொற்பொழிவுகளையும் சான்றுகளாகக் கூறலாம். சிறந்த பேச்சாளர்களின் பேச்சு அமைப்பை அடிப்படையாகக் கொண்டு, மேலை நாட்டு நூல்களின் கருத்துகளையும் பயன்படுத்தி மேடைத்தமிழுக்கு இலக்கணம் வகுக்க வேண்டும். பேச்சுத் தமிழ் வளர்ச்சிக்கு வானொலி நிகழ்ச்சிகளும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், திரைப்படக் காட்சிகளும், ஒலி நாடாவும் (Audio Cassette), ஒளி நாடாவும் (Video Cassette) பரவல் தொடர்புச் சாதனங்களாக அமைந்திருக்கின்றன.

**இலக்கியத் தமிழும் அறிவியல் தமிழும்**

இலக்கியத் தமிழுக்கும், அறிவியல் தமிழுக்கும் அநேக வேறுபாடுகள் உள்ளன என்பதை முதலில் உணர வேண்டும். இலக்கியத் தமிழ் வேறு; சட்டத் தமிழ், மருத்துவத் தமிழ், பொறியியல் தமிழ் முதலியவை வேறு. இந்தக் கருத்துகளை நான் ''டெல்லி கேந்திரிய இந்தி சமிதி'' என்ற உயர்மட்டச் சங்கக்குழு அங்கத்தினராகப் பணியாற்றியபோது பல கூட்டங்களில் விளக்கியிருக்கிறேன். தக்ஷிண பாரத இந்தி பிரச்சார சபா மூலம் நடத்தப்படும் பிராத்மிக், ராஷ்டிர பாஷா, விசாரத் முதலிய பயிற்சிகளால் சட்ட மன்றங்களில் இந்தியைப் பயன்படுத்த இயலாது. அதனால், ஒவ்வொரு தொழிலுக்கும் உகந்த நடைமுறைமொழி (Functional Language) இருக்க வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினேன். அக்காலத்தில் ஆங்கிலத்தில் பயன்படுத்திய சட்ட மொழியை விளங்காமொழி (Legal Jargon) என்று ஏளனமாகக் கூறுவார்கள். சாதாரணப் பொது மக்களுக்கும் புரியும் வகையில் 'சட்டத் தமிழ்' இருக்க வேண்டும் என்ற

கருத்தை என் நண்பர் திரு. மா. சண்முக சுப்பிரமணியம் எழுதிய 'சட்டத் தமிழ்' என்ற நூலின் மூலமாக நன்றாகப் புரிந்து கொள்ளலாம். அவர் இந்நூலின் முகவுரையில் "அறிவின் கருவி மொழி. உள்ளுணர்வினை எழுப்பி, உள்ளத்தை உயர்த்தும் கவிதையிலும், உரைநடையிலும் மொழி வளருவது ஒருவகை; அறிவியல்களை உணர்த்தும் முறையில் மொழி வளர்வது மற்றொரு வகை. முன்னதைப் 'பொது இலக்கியம்' என்றும், பின்னதை 'அறிவியல் இலக்கியம்' என்றும் கூறுகிறோம். எந்த அறிவியலை விளக்குவதற்கு மொழி பயன்படுகிறதோ, அந்த அறிவியலுக்கு ஏற்றபடி மொழியும் வளர்ந்து வளம் பெறுகிறது. சட்ட நூல்கள் அறிவியல் இலக்கியத்தைச் சார்ந்தவை" என்று நான் கூறிய கருத்தை விளக்கி யிருக்கிறார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப்பட்டன. இதன் விளைவாக, இதர மாநிலங்களைப் போல் தமிழ்நாட்டிலும் தமிழ்மொழி வளர்ச்சியில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1956-ம் ஆண்டு இயற்றப்பட்ட 'தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை' நிறைவேற்ற அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. இதில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும் ஒன்று. அரசினர் தமிழினைக் கல்லூரி மொழியாக ஆக்கினர். அதனால் குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புவரை பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுத் தருகின்றனர். இந்தப் பணியில் தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களும், கல்லூரிப் பேராசிரியர்களும், அரசுத் தொடர்பில்லாத பலவித கழகங் களும், தமிழ்ப் பற்றுள்ளோரும் ஆற்றும் தொண்டு பாராட்டத்தக்கது. முன்னாள் கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அநேக அறிவியல் நூல்களின் அணிந்

துரையில் கீழ்க்காணும் கருத்தை வெளியிட்டிருக்கிறார் : '' தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு, ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ், எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும், மாணவர்களையும் சார்ந்ததாகும் ''. பல சட்ட நூல் களையும், பிற அறிவியல் நூல்களையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரும் மற்றும் பலரும் வெளியிட்டு வருவது தமிழ் வளர்ச்சிக்குச் சிறந்த பணிகளாகும். 1957 இல் ஆட்சிச் சொல் அகராதியையும் 1968 இல் சட்டச் சொல் அகராதி யையும் தமிழக அரசு வெளியிட்டது.

நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழில்தான் நடத்தப்பட வேண்டுமென்றால் சட்டங்கள் தமிழில் இருக்கவேண்டும். ஆங்கிலத்தில் உள்ள சட்டங்களைத் தமிழில் அமைக்க வேண்டுமென்றால் சட்டக் கலைசொற்களுக்கு ஒரே சீரான தமிழாக்கம் செய்வது அவசியம். என் நண்பர் காலஞ்சென்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. ம. அனந்தநாராயணன், தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டச்சொல்லாக்க ஆணைக்குழுத் தலைவராகப் பணியாற்றினார். அவர் 1968-ஆம் ஆண்டு இறுதியில் ஒரு சட்டச்சொல் அகராதி தொகுத்தார். அவர் சொல்லியபடி, '' சட்டக் கலைச் சொற்களின் ஒரே சீரான தமிழாக்கம் இல்லையெனில், ஆங்கிலத்தில் உள்ள சட்டங் களைத் தமிழில் அமைப்பது இயலாது. மேலும் தமிழில்

அமைக்கப்படும் பல்வேறு சட்ட வாசகங்களில் தெளிவும், திட்பமும் இல்லாது போய்விடும்; பொருள் மயக்கமும் குழப்பமும் மிகுந்து விடும். இன்ன சட்டக் கருத்தினைக் குறிப்பது இன்ன தமிழ்ச் சொல் என்று அறுதியாக வரையறுத்து வகுத்தால்தான், அச்சொற்களைக் கொண்டு தமிழாக்கம் பெறும் சட்டங்கள் பொருள் மயக்கமோ முரண்பாடோ இன்றி அமைய முடியும்.'' எனவே சட்டங்களைத் தமிழாக்கவும், தீர்ப்புகளைத் தமிழில் எழுதவும், மொழி பெயர்க்கவும், சட்ட நூல்களைத் தமிழில் இயற்றவும் அடிப்படையாக அமைவது 'சட்டச் சொல் அகராதி' ஆகும் என்ற கருத்தினை மறுப்பதற்கில்லை. அந்தச் சட்டச் சொல் அகராதி நுண்ணிய சட்டக் கருத்துகளைத் திண்ணிய முறையில் கூற இயலும் என்ற முறையில் நன்றாக ஆக்கப் பெற்றுள்ளது.

'சட்டச் சொல் அகராதி' இயற்றும் பணியில் சில கொள்கைகளைச் சொல்லாக்க ஆணைக்குழு மேற்கொண்டது. இக்கொள்கைகள் அறிவியல் அகராதிகளுக்கெல்லாம் பயன்படுபவையாகையால் இவற்றை விளக்கிப் பரிசிலனை செய்வது அவசியம். ''தமிழ் மொழியின் வளர்ச்சியையும், முதிர்ச்சியையும், தொன்மையையும் சட்டத்தின் நுட்பமான கருத்துகளைத் தெரிவிக்க இயலும் இலக்கிய வளத்தையும் கருதி, இலக்கியத்தில் ஆங்காங்கே விரவிக் காணப்பெறும் சில சொற்களையும் அவை சிறிது கடினமாக இருப்பினும் பயன்படுத்த வேண்டும்.'' மத்திய அரசாங்கம் அமைத்துள்ள ஆணைக் குழுவினர் பரிந்துரைக்கும் அகில இந்தியச் சொற்களையும் இயன்றவரை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதே சமயம் இது பற்றிய பொது விதி இயற்றுவது இயலாது. இவை மட்டுமன்றி, பேச்சுவழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். வேண்டுவன என்று கருதப்பட்ட நிலையில் புதுச் சொற்களைப் படைக்க வேண்டும்.

தமிழில் சட்டச் சொற்கள் அமைக்கும் பணியைத் தமிழ் மொழிபெயர்ப்பு என்று சொல்லுவதா (Translation), மொழியாக்கம் (Transcreation) என்று சொல்லுவதா என்ற வினா எழுகிறது திரு. அனந்த நாராயணன் 'சட்டச்சொல் அகராதி'யின் முன்னுரையில், அந்நூலின் ஆங்கிலச் சட்டச் சொற்கள் தமிழில் மொழி பெயர்ப்புச் (Translation) செய்யப்பட்டுள்ளன என்று கூறுவதைவிட, தமிழில் மொழியாக்கம் (Transcreation) செய்யப் பெற்றுள்ளன என்பதே பொருந்தும் என்று விளக்கி யிருக்கிறார். "ஒரு சொல்லின் பொருளை மறுமொழியில் கூறுவது மொழி பெயர்ப்பு; ஒரு சொல் சுட்டும் கருத்தினை மறுமொழியில் அமைப்பது மொழியாக்கம் Damages என்பதை 'இழப்பீடு' என்றே சாதாரணமாக மொழி பெயர்ப்பார்கள். ஒப்பந்த முறிவால் (Breach of contract) ஏற்படும் இழப்பிற்கு ஈடாகக் கொடுக்கப்படும் தொகையை 'இழப்பீடு' என்பது பொருத்தமே. ஆனால், அவதூறு (Defamation) போன்ற தீங்குகளுக்கு மாற்றீடாகப் பெறப் படும் தொகையை இழப்பீடு என்பதைவிடத் 'தீங்கிடு' என்பதே சாலப் பொருந்தும் எனவே Damages என்ற ஆங்கிலச்சொல் 'இழப்பீடு', 'தீங்கீடு' என்ற இரு சொற்களாகத் தமிழ் ஆக்கம் செய்யப்பட்டுள்ளது. ஏற்பட்ட இழப்பிற்கு ஈடாகக் கொள்வதையும், இழைத்த தீங்கிற்கு ஈடாக உள்ளதையும் குறிப்பதற்கு ஆங்கிலத்தில் இருக்கும் சொல் ஒன்றேதான். ஆனால், தமிழிலோ வேறுபட்ட கூறுகளைக் குறிக்கும் வகையில் இரு சொற்களை ஆக்குகிறோம். இவ்வாறு ஆங்கிலத்தை விடத் தெளிவும், திட்பமும் உள்ள தமிழாக்கத்தினை இந்நூலில் காணலாம்." சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில – தமிழ் சொல் அகராதியில் Damages என்ற சொல் லுக்குச் சட்டப்பொருள், இழப்பீடு என்றுதான் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. புகழ் பெற்ற ஆங்கிலப்

புத்தகங்கள் 'Law of Damages' என்ற தலைப்பில்தான் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவைகளைத் தமிழில் வெளியிட வேண்டுமென்றால், 'இழப்பீடு, தீங்கிடு, சட்டம் என்று அமைக்க வேண்டும். அநேக வழக்குகளில் நஷ்டத்திற்கு இழப்பீடு பெறலாம். சட்ட அகராதியிலேயே General damages, Speci l damages, Liquidated damages, Ordinary damages, Contemptuous damages, Exemplary damages, Nominal damages என்பவைகளுக்குப் பொதுமுறை, தனி முறை, அறுதியிட்ட, சரிநிகர், அற்ப, எச்சரிக்கை, பெயரளவு என்கிற பதங்களுடன் இழப்பீடு என்ற சொல் தான் பயன் படுத்தப்பட்டு இருக்கின்றது. ஆனால், தீங்கியல் சட்டத்திலும் இவ்வித இழப்பீடுகளுண்டு. அவைகளுக்கு மேற்படிச் சொற்களுடன் தீங்கீடு என்ற பதத்தைச் சேர்க்க வேண்டாவா ?

தமிழில் பொருத்தமான சொல்லிருக்கும்பொழுது, புதுச் சொல்லை அமைக்கக் கூடாது. ஆங்கிலத்தில் Know- ledge, Wisdom, என்ற இரு சொற்களுக்கும் தமிழில் 'அறிவு' என்ற ஒரு சொல்லிருப்பதால், Wisdom என்பதற்கு 'இயல்பறிவு' எனக் கூறுவதே பொருத்தம் என்று கருதுவது தவறு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் அகராதியில் 'ஞானம்' எனும் சொல்லின் பொருள் 'Wisdom' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

புதுச் சொற்றொடர்களைச் சேர்த்தமைத்தலும் அறிவியல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இவை நாளடைவில் புதிய கருத்துகளைக் குறிக்கும் சொற்களாக வந்துவிடும். புதுச் சொற்கள் மொழிக்கு வளந்தருவதோடு அம்மொழியைப் பயிலுவோரின் சிந்தனைத் திறனையும் சீரியதாக்கும். இக்கருத்தை மேற்கொண்டு புதுச் சொல்லைப் புனைகின்றனர். சான்றாகச் ''சான்றியல் சட்ட''த்தில் Fact என்ற ஆங்கிலச் சொல்லுக்குப்

'பொருண்மை' என்று புதுச்சொல் புனையப்பட்டுள்ளது. ஏனெனில் Fact என்ற சொல்லுக்குச் சான்றியல் சட்டத்தில் பின்வரும் பொருள் விளக்கம் தரப்பட்டிருக்கிறது:

Fact means and includes:

(1) Anything, state of things, or relation of things, capable of being perceived by the senses and

(2) Any mental condition of which any person is conscious (Section 3)

இந்த விளக்கத்தைப் பின்வருமாறு சட்டச் சொல் அகராதியில் மொழி பெயர்த்திருக்கின்றனர்: "புலன்களால் உணரத் தக்க பொருள், பொருள்களின் அமைப்பு நிலை, பொருள் களின் உறவு நிலை, இவற்றையும் ஒருவர் உணர்வுறும் எந்த மன நிலையையும், "பொருண்மை" என்ற இச்சொல் உட்படுத்திக் குறிக்கிறது"

இவ்விளக்கத்தைப் பொதுவாக Fact என்ற சொல்லுக் கான அகராதி மொழிபெயர்ப்பு எனலாம். இதனைச் செய்தி, நிகழ்ச்சி, பொருள், உண்மை போன்ற சொற்கள் தெளிவாக்காது. அறிவியல் சொற்களை எளிமையாக்குவது கடினம் என்பதற்கு இஃது ஒரு சான்று.

திரு. எஸ். மகராஜன் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு ஆட்சிமொழி ஆணையம் 1979-ல் வெளி யிட்ட சட்டச் சொல் அகராதி, Fact என்ற சொல்லுக்குச் 'சங்கதி' என்ற மொழிபெயர்ப்பைத் தருகிறது. தமிழ் அகராதியில் சங்கதி என்ற சொல்லுக்குச் சமாசாரம், விஷயம், சம்பந்தம் என்று பொருள் தரப்பட்டுள்ளது. Fact என்ற செல்லுக்கான மொழிபெயர்ப்பைப் பற்றித் திரு என். மகராஜன், அகராதியின் முன்னுரையில் குறிப்பிடும் போது "ஆந்திரச் சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமும்,

கேரளச் சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமும் Fact என்ற சொல்லைச் 'சங்கதி' என்றே மொழி பெயர்த்திருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

Forgery என்ற சொல் சட்டச் சொல் அகராதியில் 1968 'பொய்யாவணம் புனைதல்' என்று தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. 1979 ஆம் ஆண்டுச் சட்டச் சொல் அகராதியில் Forgery என்ற சொல்லைச் 'சிருஷ்டனை' என்று தமிழாக்கம் செய்தனர். இதைவிடப் 'பொய்யாவணம் புனைதல்' என்பதே சிறந்தது. ''ஆவணம்'' என்னும் சொல் சேக்கிழாரால் பெரிய புராணத்தில் Document என்ற பொருளில் கையாளப்பட்ட சிறப்புடைச் சட்டச் சொல் என்று முன்பே குறிப்பிட்டேன். 1968 ஆம் ஆண்டுச் சட்டச் சொல் அகராதியில் Document என்பதற்கு ஆவணம் என்று சரியான தமிழாக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1979 ஆம் ஆண்டுச் சட்டச் சொல் அகராதியில் Document என்பதற்குப் 'பத்திரம்' என்று மொழி பெயர்த்துள்ளார்கள். சட்டச் சொல் அகராதியில் முழுக்கச் சட்டச் சொற்களே இருக்க வேண்டும் என்ற கருத்திற்கு வேறுபாடு இருக்க முடியாது. இது தவிர Cake, Calcium, Curry Leaves, Curry Powder, Hair Cutting Saloon போன்ற சட்டச் சார்பற்ற சொற்களும் 1979 ஆம் ஆண்டுச் சட்டச் சொல் அகராதியில் இடம்பெற்று உள்ளன. இச்சட்டச் சொல் அகராதியில் Human being என்ற தொடருக்கு 'மானிடப் பிராணி' என்று பொருள் கூறுவது பொருத்தமாகவில்லை. 1968 ஆம் ஆண்டுச் சட்டச் சொல் அகராதியில் அன்றாட வழக்கிலுள்ள சொற்கள் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. சான்றாக Attachment என்ற சொல் 'ஜப்தி' என்றும், Bail என்ற சொல் 'ஜாமீன்' என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வித மொழிபெயர்ப்பைத் தூய தமிழ்மொழி இயக்கம் குறை சொல்லாமலிருக்காது. 1968 ஆம் ஆண்டுச் சட்டச் சொல் அகராதி, 1979 ஆம்

ஆண்டுச் சட்டச்சொல் அகராதியைவிடச் சிறந்ததாகயிருப் பினும், ஆங்கிலச் சட்டச் சொல் அகராதியைப் போல் எல்லாச் சட்டச் சொற்களும் மொழி பெயர்க்கப்படவில்லை. ஆங்கிலச் சட்டச் சொல் அகராதிகள் ஆயிரக்கணக்கான பக்கங்களால் அமைந்திருக்க, 1968 ஆம் ஆண்டுத் 'தமிழ்நாடு' சட்டச் சொல் அகராதி 350 பக்கங்களிலேயே இயற்றப் பட்டிருக்கிறது. ஆனால், திரு. ம. அனந்தநாராயணன் முன்னுரையில் குறிப்பிட்டதை நினைவில் கொள்ளவேண்டும். "அறிவியல் என்றும் வளருவது. எனவே அறிவியலின் கருவியாகஅமையும் மொழியும் வளரும் தன்மை கொண்டது. ஆதலால் இதுபோன்ற நூல்களில் எதையும் முடிவாகக் கொள்ளுதற்கில்லை. இந்நூலிற் காணப்படும் சொற்கள் நாளடையில் இன்னும் சீர்பட உருவாகலாம்." சென்னைப் பல்கலைக்கழகம் ஆங்கில - தமிழ் அகராதியைத் தொகுப்ப தற்கு ஆக்சுபோர்டு ஆங்கில (சுருக்க) அகராதியை அடிப்படை யாகக்கொண்டு ஆங்கிலச் சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதுபோல், உயர்ந்த தரமுள்ள ஆங்கிலச் சட்டச் சொல் அகராதியைப் பயன்படுத்தித் தமிழில் சட்டச் சொல் அகராதி இயற்றும் பணியில் ஈடுபடுதல் தமிழ்ச் சட்டச் சொல் வளர்ச்சிக்கு நாம் செய்யவேண்டிய முக்கிய கடமை என்பதில் ஐயமில்லை.

**பிற மொழிச் சொற்கள் :**

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்"

என்று கவிஞர் பாரதியார் கருத்தைத் தமிழ் வளர்ச்சி ஆய்வு களில் வலியுறுத்துகிறார்கள். பொதுவாக அனைத்துச் சொற்களையும் தூய, கலப்பற்ற தமிழிலேயே ஆக்கிக் கொள்வது என்பது ஒரு வகுப்பினர் கொள்கை. அவர்கள் தமிழில் இதர மொழிகளின் கலப்பு இருக்கக்கூடாது என்னும் கொள்கையை முக்கியமாகக் கருதுபவர்கள். மற்றொரு

வகுப்பினர் நடைமுறையில் பயன்படுத்தப்படும் இதரமொழி வார்த்தைகளையும்கூடத் தமிழில் – முக்கியமாகச் சட்டத் தமிழில் – பயன்படுத்தலாமென்று கருதுகின்றனர். இந்தக் கருத்துப் பேதங்களில் (School of thought) ஏற்படும் வேறுபாடுகளை ஆராய்ந்து ஒரு நல்ல முடிவு காண்பது அவசியம். ஆனால், அறிவியல் வளர்ச்சிக்கு ஈடாக விரைந்து தமிழ் சொற்களைப் படைத்துக் கொண்டே, இயலாத விடங்களில் பிறமொழிச் சொற்களையும் பயன்படுத்தும் கோட்பாட்டைப் பின்பற்றுவதே இன்றியமையாதது. அறிவை வளர்ப்பது முக்கியம் என்ற நிலையில் இந்தக் கொள்கையைப் பின்பற்றலாம். இதில் பிற நாடுகளும் வழிகாட்டியாக இருப்பதைக் கவனிக்கவேண்டும் ஜப்பானியர் சாதாரண ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் கவலை கொள்வதில்லை. Clutch, Gear, Brake முதலிய வார்த்தைகளை அப்படியே பயன்படுத்துகிறார்கள். சோவியத் நாட்டிலும் அறிவியல் வளர்ச்சிக்கு ஆங்கிலச் சொற்களைப் பரவலாகப் பயன்படுத்துகிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்து ஆங்கில – தமிழ் அகராதியில் ஆங்கிலச் சொற்களே தமிழில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. Motor Car என்பதற்கு மோட்டார் என்றும், Tyre-க்கு ரப்பர் டயர் என்றும் மொழி பெயர்ப்புச் செய்துள்ளனர். நமது நாட்டில் மோட்டார் பழுது பார்ப்பவர், உதிரி உறுப்புகள் வாங்குவதற்கு ஆங்கில சொற்களைத்தான் பயன்படுத்துகிறார்.

ஒரு நூலை மொழிபெயர்க்க வேண்டுமென்றால், மொழி பெயர்ப்பாளர், இரண்டு மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவராக இருத்தல் இன்றியமையாததாகும். மூலச் சொல்லின் கருத்தை நன்கு உணர்ந்து, அச்சொல் உணர்த்தும் பொருளை நன்கு புரிந்துகொண்டு, அதைத் தமிழில் கூறும் திறமை படைத்தவரால்தான், சீரிய முறையில் மொழி பெயர்த்தல் இயலும். மேலும் எந்த அறிவியல் துறை நூலை

மொழி பெயர்க்க வேண்டுமோ, அந்தத் துறையில் அவர் நன்கு தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும் என்பது சொல்லாமலேயே விளங்கும். டாக்டர் வா. செ. குழந்தை சாமி 'அறிவியல் தமிழ்' என்ற நூலில் அறிவியல் தொழில் நுட்ப இலக்கியத்தைப் பற்றி, ''அறிவியல், தொழில் நுட்ப இலக்கியங்களைத் தமிழில் உருவாக்குவதை ஒரு சாதாரண மொழி பெயர்ப்புப் பணியாகவே பலரும் கருதுகின்றனர். எனவே ஒவ்வொரு அறிவுத்துறையிலும் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் அல்லது துறைச்சொற்களுக்கு நேரான தமிழ் சொற்களை, இருக்கும் சொற்களைத் தேர்ந்தெடுத்தோ, புதிய சொற்களைப் புனைந்தோ உருவாக்கி விடுவோமானால், பிறகு ஒவ்வொரு துறையிலும், தமிழ் நூல்கள் உருவாகிவிடும் என நம்புகின்றனர். நம்மை எதிர்நோக்கி இருக்கும் பணியை நாம் சரியாக எடை போடவில்லை. அறிவியல் தமிழை உருவாக்குவது இயன்ற பணியே யாயினும், அது பலர் நினைப்பது போல எளிய பணியன்று; வெறும் மொழி பெயர்ப்புப் பணியும் அன்று; தமிழில் முழுவதும் புதிய துறையில் இலக்கியம் உருவாக்குவதாகும்'' என்று விளக்கியிருக்கிறார். மணவை முஸ்தபா மொழி பெயர்ப்பைப்பற்றிக் 'காலம் தேடும் தமிழ்' என்ற நூலில் விரிவாக எழுதியிருக்கிறார். மூல நூல் எழுதுவதைவிட மொழிபெயர்ப்புக் கடினம் என்று சான்றுகளுடன் விளக்கியிருக்கிறார்.

திரு. அழ. வள்ளியப்பா, முதலாவது குழந்தை இலக்கிய மாநாட்டில், பிறமொழியில் சிறந்து விளங்கும் குழந்தை நூல் களைத் தமிழ் மொழியில் பெயர்த்துத் தருவது ஒரு நற்பணி யாகும் என்றும், மொழி பெயர்க்கும் போது தமிழ்க் குழந்தைகளுக்கு ஏற்றவகையில் செய்யவேண்டும் என்றும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆற்றிய பணிகளை கீழ்க் காணும் முறையில் விளக்கியிருக்கிறார். ''கவிமணியவர்கள்

சில ஆங்கிலப் பாடல்களை நம் குழந்தைகளுக்கேற்ற வகையில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்கள். ஆனால் அவற்றைப் படிக்கும்போது அவை மொழிபெயர்ப்பாகவா தோன்றுகின்றன? இல்லவே இல்லை! மூலமே தமிழ் என்று நினைக்கும்படி அமைத்துவிடும் ஆற்றல் அவர்களுக்கிருந்தது. இதற்குக் காரணம் தமிழ் மரபுக்கும், குழந்தை உள்ளத்துக்கும் ஏற்றபடி அவர்கள் கவிதைகளை ஆக்கியிருப்பதுதான்.''

அநேகத் தமிழ்ச்சட்ட நூல்கள் தமிழில் வெளியிடப் பட்டிருக்கின்றன. இந்த நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் பணியில் ஈடுபட்டவர்களில் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனமும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் குறிப்பிடத்தக்கவை. என் நண்பரும், தற்பொழுது தமிழகச் சட்டத்துறை ஆட்சிமொழி ஆணைக் குழுத் தலைவருமான திரு. மா சண்முக சுப்பிரமணியம் அநேகச் சட்ட நூல்களைத் தமிழில் எழுதியிருக்கிறார். அவர் முதலில் இயற்றிய 'சட்டவியல்' என்னும் நூலை என் தலைமையில் காலஞ்சென்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. மா. அனந்தநாராயணன் ஒரு பெரிய கூட்டத்தில் வெளியிட்டார். திரு. மா. சண்முக சுப்பிரமணியம் எழுதிய 'தீங்கியல்' சட்டத்திற்கு, அந்த ஆண்டிலேயே வெளிவந்த நூல்களில் சிறந்ததென்று நான் கொடுத்த கருத்தின் மீது தமிழ்நாடு அரசாங்கம் அவருக்குப் பரிசு கொடுத்தது. 'குற்றவியல் சட்டம்' என்னும் அரிய நூலை எழுதும் பொழுது அவர்கள் அடிக்கடி என்னிடம் வந்து ஆலோசனை கேட்பதுண்டு. அந்நூலுக்கு நான் அணிந்துரை அளித்திருக்கிறேன். அநேகப் பதிப்புகள் வரவேண்டிய நூலில் அதுவும் ஒன்று. ஒவ்வொரு பதிப்பும் முன் பதிப்பைவிட முன்னேற்றம் காணும் வகையில் அமைய வேண்டும். மேல் நாட்டில் ஆங்கிலேயர்கள் வெளியிட்டுள்ள புகழ்பெற்ற

சட்டப்புத்தகங்கள் எப்படி அடிக்கடிப் பதிப்பிக்கப்பட்டுப் பதிப்புக்குப் பதிப்பு, முன்னேற்றம் காண்கின்றனவோ, அவ்விதம் தமிழில் இயற்றப்படும் சட்ட நூல்களின் தரம் வளர வேண்டும். முக்கியமாக, இந்தப் பணியில் ஈடுபடு பவர்கள் கூடிய அளவு சட்டச்சொல் அகராதியில் உள்ள வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். அவர்கள் புதுச் சொற்கள் புனையும் தொழிலில் ஈடுபடக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால், அவ்விதம் ஒவ்வொருவரும் ஓர் ஆங்கிலச் சட்டச் சொல்லுக்கு அநேகத் தமிழ்மொழி பெயர்ப்பும், மொழியாக்கமும் செய்ய முயன்றால் பொருள் மயக்கமும் குழப்பமும் மிகுந்துவிடும். அந்நிலை வாராது தடுக்கவேண்டும். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், ''இந்துச் சட்டம்'' தமிழில் இயற்றும் பணியை ஒரு வழக்கறிஞரிடம் கொடுத்து என்னை மேற்பார்வையிடச் சொல்லியிருந்தது. அந்த வழக்கறிஞர் தமிழில் திறம்படச் சிறுகதைகள் எழுதுபவர். ஆனால், அவர் எழுதிய இந்துச் சட்ட நூலின் பல பகுதிகளை நானே திருத்தி எழுத வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்குக் காரணம் இந்துச் சட்டத்தை அவர் சரிவரப் புரிந்து கொள்ளாமை ஒன்று; சட்டச்சொல் அகராதியைப் பயன்படுத்தாதது மற்றொன்று. அவர் எழுதிய இந்துச் சட்ட நூல் மேற்பட்டப்படிப்பிற்குத் தகுதியில்லை என்று என் கருத்தைக் கூறினேன். தமிழ்ச் சட்ட நூல் இயற்றும் போது அந்தச் சட்டத்தில் உள்ள நுண்ணிய கருத்துகளைக் கசடறக் கற்று நல்ல முறையில் சட்டச்சொல் அகராதியையும், தம் தமிழ் அறிவையும் பயன் படுத்திச் சட்டநூலை இயற்ற வேண்டும். அப்போதுதான் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற கொள்கையை – நீதி மன்றத்தில் நிறைவேற்ற வேண்டிய கடமையைத் – தமிழகத்துச் சட்ட ஆசிரியப் பெருமக்கள் நிறைவேற்ற முடியும். மேற்பட்டப் படிப்பிற்குத் (எம். எல்) தமிழில் சட்ட நூல்கள் வரவில்லை.

ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட மத்திய அரசு, மாநில அரசுச் சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணி, தொடர்ந்து நடந்து வருகிறது. இந்தப்பணி பூர்த்தியாகப் பல ஆண்டுகள் ஆகும். மத்திய அரசு இயற்றும் சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணி தொடர்ந்து நடக்க வேண்டும். சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் மாநிலச் சட்டங்களை நேரடியாகத் தமிழில் இயற்றி, ஆங்கில மொழிபெயர்ப்புடன் இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்புகின்றனர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், 1949 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26–ம் நாள் அன்று ‘ அரசியல் அமைப்பு அவையினரால் ’ (Constituent Assembly) ஆங்கில மொழியில் ஏற்று இயற்றப் பட்டது. உயர் நீதிமன்றங்களும், உச்சநீதி மன்றமும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் பல பகுதிகளை ஆங்கிலத்தில் விளக்கிப், பல ஆண்டுகளாக ஆயிரக்கணக் கான தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றன. இந்தியில் மொழி பெயர்க்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம், கேந்திரிய இந்தி சமிதியில் நான் 1972 முதல் 1975 வரை அங்கத்தினராகப் பணிபுரிந்த பொழுது பல தடவை பரிசிலனைக்கு வந்தது. நானும் மற்றும் சிலரும் அரசியல் அமைப்பு அவையால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டம்தான் அதிகாரப்பூர்வமானது ; அதனால் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்ட சட்டத்தில் சந்தேகம் ஏற்பட்டால், ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட சட்டத்தையும், அதற்கு உயர்நீதி மன்றங்களும், உச்ச நீதிமன்றமும் கொடுத்த விளக்கத்தையும், தீர்ப்புக்களையும் தாம் பின்பற்றவேண்டுமென்று எங்கள்கருத்தை வற்புறுத்தித் தெரிவித்தோம். தமிழில் மொழிபெயர்த்த அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் இந்த ஆட்சேபம் உண்டு. திரு. மா. அனந்தநாராயணன் தலைமையில் தமிழில் மொழி பெயர்த்த அரசியல் சட்டமும், பின் திரு. எஸ். மகாராஜன்

தலைமையில் தமிழில் மொழி பெயர்த்த அரசியல் சட்டமும் நடைமுறைக்கு வரவில்லை. சென்ற ஆண்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சியில் தமிழில் மொழிபெயர்த்த அரசியல் சட்டம் வெளியிடப்பட்டது. ஆனால் அதில் சில குறைகளிருப்பதால் பொதுமக்களுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்படவில்லை. இந்நூல் விரைவில் திருத்தப் பட்டு வெளிவரும் என நம்புகிறேன்.

தமிழக அரசு தமிழை நீதிமன்றமொழியாக ஏற்று 14-1-70 லிருந்து நீதிமன்றங்களில் சாட்சியத்தைத் தமிழில் பதிவு செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டது. "தமிழிலே தீர்ப்பு எழுத முடியுமா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காகக் குற்றவியலிலும், உரிமையியலிலும் சிறந்த தீர்ப்பை எழுதுபவர்களுக்கு ரூ. 3,000/- பரிசு அளிக்கும் திட்டத்தை வகுத்தது; நடுவர்களின் மத்தியில் ஒரு போட்டி ஏற்படுத்திக் குற்றவியல் தீர்ப்புக்காகத் திரு. த. சிவசிதம்பரத் திற்கும், உரிமையியல் தீர்ப்புக்காகத் திரு. வெ. சுப்பிர மணியத்திற்கும் பரிசுகள் வழங்கியது. குற்றவியல் வழக்கு களில் 14-11-76லிருந்து தமிழில் தீர்ப்புக் கூறவேண்டுமென்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது. குற்றவியல் வழக்குகளில் தமிழில் தீர்ப்புக் கூறுவது சிறந்த முறையில் நடந்து வருவதைக்கண்ட தமிழ்நாடு அரசு உரிமையியல் வழக்கு களிலும் அதே போன்று 1-2-'82லிருந்து தமிழில் தீர்ப்புக் கூற வேண்டுமென்ற உத்தரவு பிறப்பித்தது. இதற்குப்பிறகு சென்னை உயர்நீதி மன்றத்தின் கீழ்ப் பணிபுரியும் எல்லா நீதிமன்றங்களும் தமிழிலேயே தீர்ப்புக் கூறிவருகின்றன. இப்பொழுதும் தீர்ப்புகள் மட்டும்தான் தமிழில் எழுதப்படு கின்றனவே தவிர, வழக்குரை, எதிர் வழக்குரை, குற்ற முறையீடு, வாதங்கள் முதலியவை ஒன்றிரண்டு வழக்கறிஞர் களைத்தவிர, மற்றவர்களால் ஆங்கிலத்திலேதான் செய்யப் படுகின்றன.

சட்டசபைகளில் இயற்றப்படுவது மட்டுமல்லாமல், உயர்நீதி மன்றங்களிலும், உச்சநீதி மன்றத்திலும் கூறப்படும் ஒவ்வொரு தீர்ப்பும் அதேபோன்ற வழக்குகளில் தீர்ப்புக் கூறுவதற்கு வழிகாட்டும் வகையில் சட்டம் இருக்கும். ஆங்கில மொழித் தீர்ப்புகளை எடுத்துப் பதிப்பித்துப் பருவ இதழ்கள் மூலம் வெளியிடுவது மேல்நாடுகளிலும், நமது நாட்டிலும் நல்ல முறையில் நடைபெறுகிறது. நம் நாட்டில் அவ்விதம் வெளியிடப்படும் இதழ்களில் All India Reporter, Madras Law Journal, Madras Law weekly ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவ்வித இதழ்கள் தமிழ்மொழியில் இல்லை. 1980ஆம் ஆண்டு சனவரித் திங்களிலிருந்து ''தீர்ப்புத் திரட்டு'' என்ற ஒரு திங்கள் இதழைத் தமிழ்நாடு அரசு தமிழில் வெளியிடுகிறது. ஆனால் இது ஆங்கில மொழியில் வரும் இதழ்களுக்கு ஈடாகாது.

முதன்முதலில் நீதிமன்றத்தில் தமிழில் ஈடுபடும்பொழுது வழக்குகளிலும், தீர்ப்பு எழுதுவதிலும் நடுவர்களுக்குச் சிறிது தயக்கம் ஏற்படுவது இயல்பு. ஆனால் நாளடைவில் நீதி மன்றத் தமிழ் விருத்தியாகும் என்பதில் யாதொரு ஐயமு மில்லை. உச்ச நீதிமன்றத்தில், அரசியல் அமைப்புச் சட்டப்படி ஆங்கிலம், இந்தியாவின் நீதிமொழியாக இருக்க முடியும். தற்சமயம் ஆங்கிலம்தான் நீதிமொழியாக இருந்து வருகிறது. உயர்நீதி மன்றங்களிலும் ஆங்கிலம்தான் நீதி மொழியாக இருந்துவருகிறது. அநேக வழக்குகள் உயர்நீதி மன்றங்களிலேயே நின்று விடுகின்றன. சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழை எந்த அளவுக்கு நீதி மொழியாகப் பயன் படுத்தலாம் என்பதை நாம் ஆராயலாம்.

''சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று பட்டம் பெறலாம்'' என்று தமிழ்நாடு அரசு புதிதாகத் திட்டத்தைத் தொடங்கியிருக்கிறது. 1983 ஆம் ஆண்டில் மேல் நிலைப்

பள்ளியில் 10, +2 பயிற்சி பெற்றவர்களுக்கு ஐந்தாண்டுச் சட்டப் படிப்புக்குப் பாடத்திட்டம் தொகுக்கப்பட்டது. தமிழில் சட்டம் கற்கத் தனியாகப் பாடத்திட்டம் தொகுக்கப் படவில்லை. சட்டப் படிப்புக்குப் பாடத் திட்டம் வகுக்கும் குழுவில் ஓய்வு பெற்ற நடுவர்களில் நான் ஒருவன்தான் அங்கத்தினராக இருந்தேன். சட்ட மொழியைத் தமிழில் கற்பதற்குத் திரு. சண்முக சுப்பிரமணியம் எழுதிய 'சட்டத் தமிழ்', திரு. வெங்கடேசஅய்யர் எழுதிய 'பத்திரம் எழுதலும் சட்டமும்', தமிழ்நாடு அரசு 1968 ஆம் ஆண்டு வெளியிட்ட 'சட்டச்சொல் அகராதி' முதலியவை மட்டும் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. 1979ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்ச் சட்டச் சொல் அகராதியைப்பற்றிப் பாடதிட்டத்தில் குறிப் பிடவில்லை. தமிழில் இயற்றப்பட்ட தமிழ்ச் சட்ட நூல்கள் சட்டப் பாடத்திட்டத்தில் இடம்பெறவில்லை. சட்டக் கல்லூரிகளில் தமிழில் கற்க வருபவர்கள் மிகக் குறைவு. அவர்களில் சரியாகத் தமிழில் தேர்ச்சி பெற்றுப் பட்டம் பெறுபவர்கள் மிகவும் குறைவு. அவர்களுக்கு உயர்நீதி மன்றத்தின் கீழ்ப்பணிபுரியும் நீதிமன்றங்களில்தான் தொழில் புரியும் வாய்ப்புக் கிடைக்கும்.

வழக்கறிஞர்களிடம் பணிபுரியும் எழுத்தருக்கு (Clerk) யாதொரு பயிற்சியும் கிடையாது. மேல் நிலைப்பள்ளியில் 10, +2, பயிற்சியில் வழக்கறிஞர் எழுத்தருக்குத் தொழிற் கல்வி கொடுப்பதற்குப் பாடத்திட்டம் அமைத்து ஆசிரியர் களுக்கு வழிகாட்டி நூல் ஆங்கிலத்தில் எழுதும்படி அப்பொழுது மேல் உயர்நிலைப்பள்ளி இயக்குநராக இருந்த திரு. கி. வேங்கிடசுப்பிரமணியம் என்னைக் கேட்டுக் கொண்டார். முதலில் அப்பணியை ஏற்க மறுத்தேன். பாடத்திட்டம் சரியாக அமைக்கப்பட வில்லையென்பதும், தமிழில் கற்க வேண்டிய தொழிற் பயிற்சிக்கு ஆங்கிலத்தில்

வழிகாட்டி நூல் எழுதுவது பொருத்தமில்லை என்பதும்தான் நான் மறுத்தற்குக் காரணங்கள். ஆனால், அவர் வற்புறுத்தியதனால், அப்பணியை ஏற்றுக்கொண்டு வழிகாட்டி நூலை எழுதிக்கொடுத்தேன். இதை எழுதுவதில் திரு. மா. சண்முக சுப்பிரமணியம் உதவியாக இருந்தார். ஆனால், எத்தனை மாணாக்கர்கள் வழக்கறிஞர் எழுத்தர் பயிற்சி பெற்றார்கள் என்பது எனக்குத் தெரியாது.

**பிற அறிவியல் நூல்கள் :**

மருத்துவம், பொறியியல் முதலிய அறிவியல் கல்லூரிகளில் ஆங்கிலத்தில்தான் கல்வி கற்பிக்கப்படுகிறது. செவிலியர்களுக்கு (Nurses) தமிழில் கல்விப்பயிற்சி கொடுக்கலாம். பல தொழிற்கல்விப் பள்ளிகளிலும் (Polytechnic Schools) மருத்துவம், பொறியியல் முதலிய துறைகளில் பணிபுரியும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்குத் தமிழில் கல்விப் பயிற்சி கொடுக்கலாம். இவ்விதப் பணிகள் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குச் சிறந்த சாதனங்களாகும்.

மருத்துவத் துறையில் தமிழில் பல மூல நூல்களும், மொழி பெயர்ப்பு நூல்களும் இயற்றப்பட்டிருக்கின்றன. 140 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க மருத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர் ஃபிஷ்சிரின் முதன் முறையாக மருத்துவக் கல்வியைத் தமிழில் சிலருக்குக் கற்பித்துள்ளார். அவர் மருத்துவத்துறையில் கலைச்சொல் தொகுதிகளை முதன் முதலாக வெளியிட்டவர் ஆவர். தற்சமயம் இலங்கையில் மருத்துவக் கல்வி தமிழில் கற்பிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. மணவை முஸ்தபா இயற்றிய 'காலம்தேடும் தமிழ்' என்ற நூலில் ஃபிஷ்சிரின் கையாண்ட கலைச் சொல்லாக்க நெறிமுறையைக் கீழ்க்கண்டவாறு விளக்கியிருக்கிறார். தமிழில் மருத்துவத்தைப் பற்றிச் சொல்லும் போது, அதற்குரிய கலைச் சொற்களைக் கூடியவரை தமிழிலேயே அமைத்துச் சொல்ல வேண்டும் ஆங்கிலக் கலைச்

சொல்லுக்கு இணையான சொல் தமிழில் கிடைக்கவில்லையென்றால், பழக்கத்தில் வழங்கிவரும் – பலரும் அறிந்துள்ள – சமஸ்கிருதச் சொல்லை உள்ளது போன்றோ ஒரு சில திருத்தங்களுடனோ ஏற்றுப் பயன் படுத்திக்கொள்ளலாம். ''தமிழில் மூலச்சொல்லாகவோ, அன்றி மொழிபெயர்ப்புச் சொல்லாகவோ கலைச்சொல் அமைய இயலாவிடின் ஆங்கில மூலக் கலைச்சொல்லையே ஒலிபெயர்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.'' இந்தக் கலைச் சொல்லாக்க நெறி முறை தான் நடைமுறையில் கையாளப்பட்டு வருகிறது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மருத்துவக் கலைச்சொற்களைத் தொகுத்து வெளியிடும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. தமிழ் மருத்துவச்சொல் அகராதி தட்டச்சில் அமைத்துப் பயன் படுத்துகிறார்கள். அச்சிட்ட தமிழ் மருத்துவச் சொல் அகராதி வெளியிடப்பட இருக்கிறது.

பொறியியல் துறையிலும் தமிழில் பல நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. சென்னைப் பல்கலைக்கழகம் தமிழில் அறிவியல் சொல்லாக்கப் பணியில் சிறந்த பணி யாற்றி வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராகப் பணியாற்றிய டாக்டர் ஜீ. ஆர். தாமோதரன் அறிவியல் கலைச்சொல்லாக்கத்தில் முனைப்புக் காட்டி உழைத்தார். பல ஆண்டுகளாக வெளிவரும் 'கலைக்கதிர்' இதழும் இத்துறையில் பயனுள்ள பணி புரிந்துள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகம் அறிவியல் தமிழுக்காகவே ஒரு துறையை அமைத்துச் சிறந்த பணியாற்றி வருகிறது. அநேக நிறுவனங்கள் தமிழில் அறிவியல் வளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன 'யுனெஸ்கோ கூரியர்' சர்வதேசத் தமிழ்த் திங்களிதழ் மூலம் ஆங்கில அறிவியல் கட்டுரை களைத் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்து வெளியிடு கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகம், பத்துத் தொகுதிகளில்

கலைக் களஞ்சியம் தொகுத்து வெளியிட்டது. இப்போது தமிழ்ப் பல்கலைக்கழகம் அப்பணியை மேற்கொண்டு பல தொகுதிகளை வெளியிட்டு வருகிறது. ஆங்கிலத்தில் அறிவியல் பருவ இதழ்களில் வரும் சிறந்த கட்டுரைகள் எல்லாம் தமிழில் வெளியிட ஏற்பாடு செய்யவேண்டும். ஆண்டுதோறும் மருத்துவத்திலேயே பல்வேறு துறைகளில் உலகமெங்கும் ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மூலமாகக் கண்டு பிடிக்கப்படும் புதிய கருத்துகளடங்கிய சிறந்த கட்டுரை களைத் தொகுத்து மருத்துவம், அறுவை என ஒவ்வொரு துறையிலும் 'ஆண்டுப் புத்தகம்' Year book of Medicine. Year book of Surgery என்று 26 புத்தகங்கள் வெளியிடப் படுகின்றன. சட்டத் துறையிலும், பொறியியல் துறை யிலும், இதர அறிவியல் துறைகளிலும் இவ்விதமாக ஆங்கிலப் பருவ நூல்கள் பல தொகுதிகளாக வெளியிடப் பட்டு வருகின்றன. இவைகளுக்குத் தரத்திலும், அளவிலும் ஈடாகத் தமிழில் அறிவியல் பருவ இதழ்கள் வெளியிட முயல வேண்டும். இப்பணியைச் சரிவரச் செய்யாவிடில் மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் தமிழில் கல்விப் பயிற்சி கொடுக்க இயலாது. அறிவியல் துறையில் மேல் பட்டப்படிப்பிற்கு இவ்விதச் சிறந்த பருவ இதழ்களும், தரமான நூல்களும் தமிழில் இருந்தால்தான் அறிவியல் கல்வி வளரும்.

ஆங்கிலத்தில் க்ரே எழுதிய உடற் கூற்றியல் (Gray's Anatomy) உலகப் பிரசித்தி பெற்ற மருத்துவ நூல். மருத்துவக் கல்லூரியில் முதல் இரண்டு ஆண்டு அந்தப் புத்தகத்தை வேத நூல்போல் படிக்கவேண்டும் எல்லா மருத்துவத்துறைக்கும், முக்கியமாக அறுவைச் சிகிச்சை மருத்துவருக்கும் உடற் கூற்றியல் ஞானம் அவசியம். சென்ற நூற்றாண்டு க்ரேஸ் உடற் கூற்றியல் ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட

ஒரு புத்தகத்தைச் சென்னை மறைமலையடிகள் நூல் நிலையத்தில் கண்ணாடிப் பெட்டியில் பார்வை நூலாக இருக்கக் காணலாம். மருத்துவர்களில் எவரேனும் அதனைப் படித்தார்களோ என்பதைப் பற்றி விடை கூற இயலாது. அறுபது ஆண்டுகளுக்கு முன் ஐதராபாத்தை அரசாண்ட நைசாம் (Nizam) உலகிலேயே செல்வர்களில் இரண்டாம் இடம் பெற்றவர். அவர் உஸ்மானியா மருத்துவக் கல்லூரியில் மருத்துவக் கல்வி உருது மொழியில் கற்பிக்கப் படவேண்டும் என்ற ஒரு திட்டத்தை ஏற்டுபத்தினார். அதற்கு முதற்படியாகக் க்ரேஸ் ' உடற் கூற்றியல் ' நூலை உருது மொழியில் மொழி பெயர்க்க ஒரு குழுவை நியமித்தார். 1930 ஆம் ஆண்டுப் பதிப்பை ஐந்து ஆறு லட்ச ரூபாய் செலவில் மூன்று ஆண்டுகளில் மொழி பெயர்க்கும் பணியை முடித்தார். ஆனால், அதற்குள் ஆங்கிலப் புத்தகத்தின் மறு பதிப்பு வெளியிடப்பட்டதால், தாங்கள் செய்த பணியை மீண்டும் தொடர வேண்டு மென்றும், அதற்கு மேலும் சில லட்ச ரூபாய் செலவிட வேண்டும் என்றும் அந்தக் குழு நைசாமிடம் முறையிட்டது. இதைக் கேட்ட நைசாம் உருது மொழியில் மருத்துவக் கல்விப் பயிற்சி கொடுக்கும் எண்ணத்தைக் கைவிட்டார். மத்திய அரசு இந்தி மொழி வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும், எல்லாத் துறைகளிலும் அதனைப் பரப்புதற்கும் திட்டங் களை வகுத்து, வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்து பாராட்டத் தக்க வகையில் ஆர்வத்துடனும், ஆற்றலுடனும் செயல் முறையில் எடுத்து வரும் நடவடிக்கைகளை ' எங்கும் தமிழ், எதிலும் தமிழ் ' என்ற கோட்பாட்டைச் செயல் முறையில் உருவாக்கப் பணிபுரியும் நாம் பின்பற்ற வேண்டும். கேந்திரிய இந்தி சமிதியின் கூட்டங்களில் பிரதமரும், சில மத்திய அமைச்சர்களும், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களும், இதர சிறந்த அங்கத்தினர்களும், திட்டங்களை வகுப் பதில் ஆர்வத்துடனும், ஆற்றலுடனும், பணிபுரிகிறார்கள். அவ்வித குழுவைத் தமிழ் நாட்டிலும் அமைக்க வேண்டும்.

**முடிவுரை :**

இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது பட்டியலில் 15 மொழிகள் மாநில மொழிகளாக அங்கீகாரம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் மருத்துவம், பொறியியல் முதலிய கல்லூரிப் பயிற்சிகள் மாநில மொழியில் கற்பித்தால் அதனால், விளையும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். உதாரணமாக, தமிழ் நாட்டில் வேலை புரியும் ஒருவன் பம்பாய்க்கு மாற்றப் பட்டால், அவன் சென்னையில் மருத்துவரிடம் ஒரு வியாதிக்குப் பெற்ற சிகிச்சையைப் பம்பாயில் இருக்கும் மருத்துவரிடம் தமிழ் மருந்துச் சீட்டைக் காண்பித்து விளக்க முடியாது. அகில இந்திய மருத்துவ, பொறியியல் கருத்தரங்குகளில், பொது மொழியாக ஆங்கிலம் இல்லாவிடில், இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து வரும் தம்தம் மொழியில் பயிற்சி பெற்றவர்கள் அறிவியல் ஆய்வுகள் நடத்துவது கடினம். உலகத்தில் பல நாடுகளில் நடக்கும் அறிவியல் ஆய்வரங்கங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புத் தமிழ்நாட்டினர்க்கு இல்லாமல் போய்விடக் கூடாது. மேல் பட்டப்படிப்புப் பயில்பவருக்காவது பரவலாகப் பயன்படும் ஆங்கிலம் அவசியம் என்பதை மறுக்க முடியாது.

'' எங்கும் தமிழ், எதிலும் தமிழ் '' என்பது ஓர் உணர்ச்சி பூர்வமான கொள்கையாக, இலட்சியமாக இருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால், இதை நடைமுறையில் கொண்டு வருவதில், வரலாற்றுச் சூழ்நிலையில் பல பிரச்சினைகள் எழுகின்றன. '' மெய்ப்பொருள் காணும் '' மேன்மைத் திறனால்தான் நாம் இச்சிக்கலைத் தீர்க்கமுடியும்.

அறிவியல் கல்வி ஆக்கமுறை பெருக வேண்டும். இதற்கான உத்தி எது என்பதை அறிஞர்கள் ஆய்ந்து கண்டு அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

ஒரு காலத்தில் இயல், இசை, நாடகம் என்று இணைந்த முத்தமிழில் இன்றைய சூழலில் தமிழ்த் துறைகள் மேலும் விரிவடைந்து, அறிவியல் தமிழ் எனும் புது இயலும் இணைய நாற்றமிழாக – நான்கு தமிழாகத் தமிழ் விரிந்து வளர்ந்துள்ளது என்பது மணவை முஸ்தபாவின் கருத்து. அறிவியல் தமிழ் நவீன உலகில் தோன்றும் புதிய கருத்துகளையும், கண்டுபிடிப்புகளையும், ஆராய்ச்சி எண்ணங்களையும் உணர்த்தும் கருவி. டாக்டர் வா. செ. குழந்தைசாமி இயற்றிய ‘ அறிவியல் தமிழ் ’ என்ற நூலில் நம் நாட்டின் நிலையைச் சிறப்பாகக் குறிப்பிட்டு இருக்கிறார். அது வருமாறு : “ நமது நாட்டில் அறிவியல் அறிஞர்கள் இருக்கிறார்கள். அறிவியல் கல்வி இருக்கிறது. அறிவியல் ஆய்வுகள் நடைபெறுகின்றன. அறிவியல் ஆய்வு நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால், இவை நமது மொழியில் இல்லை ”. எழுத்துச் சீரமைப்பு, சொல்லாக்கம் மொழித் தூய்மை முதலிய பல்வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகளில் தமிழ் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இருப்பதை நாம் மறுக்க இயலாது. கலைச் சொல்லை அமைப்பதில் அறிவு வளர்ச்சி முக்கியமா அல்லது தூய தமிழ் மொழி வளர்ச்சி முக்கியமா என்பதில் பிரச்சினைகள் இருக்கின்றன. மொழி நம் எண்ணத்தை மற்றொருவருக்கு அறிவிக்கப் பயன்படும் கருவி என்பதை உணர்ந்து வேறுபட்ட கருத்துகளை ஆராய்ந்து தீர்வு காண வேண்டும். திருவள்ளுவர் வாக்கின்படி,

“ எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு ”.